விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
## Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 02 புதன்கிழமை (19.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 243

## யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்






| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சி.சிறீதரன் | மாவைசேனாதிராசா | எம்.ஏ.சுமந்திரன் | த.சித்தார்த்தன் | ஈ.சரவணபவன் | கே.என்.டக்ளஸ் தேவானந்தா | திருமதி விஜயகலா மகேஸ்வரன் |
| 72,258 | 58,782 | 58,043 | 53,741 | 43,719 | 16,399 | 13,071 |
| த.தே.கூ | த.தே.கூ | த.தே.கூ | த.தே.கூ | த.தே.கூ | ஈ.பி.டி.பி | ஐ.தே.க |

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்








| | | | | | |
|---|---|---|---|---|---|
| சா.நிர்மலநாதன் | செல்வம் அடைக்கலநாதன் | சிவசக்தி ஆனந்தன் | சி.சிவமோகன் | ரிசாத் பதியுதீன் | கே.கே.மஸ்தான் |
| 34,620 | 26,397 | 25,027 | 18,412 | 26,291 | 7,298 |
| த.தே.கூ | த.தே.கூ | த.தே.கூ | த.தே.கூ | ஐ.தே.க | ஐ.ம.சு.கூ |

### வடக்கு மற்றும் கிழக்கில்

# த.தே.கூட்டமைப்பு

# அமோக வெற்றி

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெருவாரியாக வெற்றிபெற்றுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி (த.தே.கூ) 14 ஆசனங்களை வசப்படுத்தியுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 5 ஆசனங்களையும், மட்டக்களப்பில் 3 ஆசனங்களையும் வன்னியில் 4 ஆசனங்களையும், திருகோணமலை மற்றும் திகாமடுல்லையில் ஒரு ஆசனத்தையும் இம்முறை தமிழரசுக் கட்சி தனதாக்கியுள்ளது. இதன்படி தமிழரசுக் கட்சிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த ஆசனங்கள் போனஸ் உட்பட 16 ஆக காணப்படுகிறது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க.முன்னிலை

### மகிந்தவின் கனவு தகர்ப்பு; பிரதமராகிறார் மீண்டும் ரணில்

(கொழும்பு)

நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி கூட்டணி 50 இலட்சத்து 98 ஆயிரத்து 927 வாக்குகளைப் பெற்று நாடளாவிய ரீதியில் 93 ஆசனங்களைக் கைப்பற்றியதுடன் போனஸ் ஆசனங்கள் 13 ஐயும் தம்வசம் மேலதிகமாக பெற்று முன்னிலை வகிக்கின்றது.

இதற்கு அடுத்தாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 47 இலட்சத்து 32 ஆயிரத்து 669 வாக்குகளைப்

24ஆம் பக்கம் பார்க்க....

## பொதுத் தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | ஆசனங்கள் |
|---|---|
| ஐ.தே.க | 93+13 = 106 |
| ஐ.ம.சு.மு | 83+12 = 95 |
| த.தே.கூ | 14+2=16 |
| ஜே.வி.பி | 4+2=6 |
| ஈ.பி.டி.பி | 01 |
| மு.கா | 01 |
| மொத்தம் | 225 |

### நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

பகல் : 10.00



### ஐ.தே.க ஆட்சியமைக்க 7 ஆசனங்கள் தேவை

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலில் இறுதியாக கிடைத்த ஆசனங்களுடன், போனஸ் ஆசனங்களும் சேர்த்து ஐ.தே.க 106 ஆசனங்களையும் ஐக்கிய

24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


# சிறுநீரகம் தேவை

24 வயதுடைய ஆண் ஒருவருக்கு 0+ சிறுநீரகம் அவசரமாகத் தேவை. 28 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். நன்கொடையாளர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு : 0777004347, 0776329349


## 16ம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

தந்தையாய் 19 - 05 - 1917



தெய்வமாய் 18 - 07 - 1999

### அமரர் சின்னத்தம்பி சின்னையா

மண்ணக வாழ்வு நிலையில்லை என்றுணர்ந்தும்
மகிழ்வாக உங்களோடு இருந்த காலங்கள்
மண்ணில் இனியொரு போதும்
மணியளவிலேனும் கிடையாதா?
மகத்தான அப்பாவே!
மறவேன் என்றும் மண்ணோடு மண்ணாகும் வரை!
மண்ணுலகில் இருந்து விண்ணுலகம்
வாழும் தந்தைக்கு - அன்பு
மகன் அனுப்பும் மடலாகட்டும்

40/1, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

அன்பு மகன்
சி.செல்வராஜா
குடும்பத்தினர்

(1522)

# மரண அறிவித்தல்கள்



## கதிர்காமர் வினாசித்தம்பி

(கட்டிட ஒப்பந்ததாரர்)

மந்துவில் கொடிகாமத்தைப் (காரைக்காடு) பிறப்பிடமாகவும், புலோலி பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமர் வினாசித்தம்பி நேற்று (18.08.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கதிர்காமர் - நல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற செல்வநாயகம் - ரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சந்திராவின் அன்புக் கணவரும், நந்தகோபன், கீதாஞ்சலி, துவாரகோபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஶ்ரீவிஜயானந்தனின் மாமனாரும், ஷருகனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (19.08.2015) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை கோதியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(1526)

## ஜெகவதனராஜா கனகாம்புஜம்



கைதடி வடக்கை பிறப்பிடமாகவும், உடுப்பிட்டி பொக்கணைச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகாம்புஜம் நேற்று (18.08.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெகவதனராஜாவின் (யக்கோ) பாசமிகு மனைவியும், ஜெகஞானகலையின் அன்புத் தாயாரும், லோகானந்தனின் அன்பு மாமியாரும், இளவேணி, சிவகௌரி ஆகியோரின் பேர்த்தியும்ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2015) புதன்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை வீதி, கரும்பாலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பொக்கணைச் சந்தி,
உடுப்பிட்டி.

கே.லோகானந்தன்
(மருமகன்)

(சி-1847)

## புதிய அரசில் த.தே.கூ?

(கொழும்பு)

ஐக்கியத் தேசியக் கட்சித் தலைமையிலான கூட்டணி நாடாளுமன்றத் தேர்தலில் கூடுதல் இடங்களைப் பெற்றிருந்தாலும், தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க போதிய இடங்கள் அவர்களுக்கு கிடைக்கவில்லை.

நாடாளுமன்றத்தில் உள்ள மொத்த இடங்களில் ஆட்சி அமைக்க தேவைப்படும் குறைந்தபட்ச எண்ணிக்கை 113. ஆனால ஐ.தே.க. தலைமையிலான கூட்டணிக்கு 106 இடங்கள்மட்டுமே கிடைத்துள்ளன.

இந் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு ஆட்சி அமைக்க இன்றியமையாததாகப் பார்க்கப்படுகிறது.

எதிர்பார்த்ததைவிட தமக்கு குறைந்த இடங்களே இம்முறை கிடைத்துள்ளன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தலின் போது நல்லாட்சிக்காகவும் இதர விஷயங்களுக்காகவும் மக்கள் கொடுத்த ஆணை நிறைவேற்றப்படும் வகையில் புதிய அரசாங்கம் செயல்பட்டால் அதற்கு கூட்டமைப்பு உறுதுணையாக இருக்கும் என அவர் கூறினார்.

அமையவுள்ள புதிய ஆட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்குமா என்பது குறித்து கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை என்கிறார் சம்பந்தன்.

ஆட்சியில் பங்கேற்பதை விட, புதிய அரசு நல்ல செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும், தேசியப் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதே தமது விருப்பம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை 6 ஆசனங்களைப் பெற்றுள்ள ஜே.வி.பி மற்றும் தலா ஒரு ஆசனத்தை பெற்றுள்ள ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி ஆகியவற்றுடன் ஐக்கிய தேசியக்கட்சி கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (சே-12)

## அருந்தவபாலனின் விருப்பு வாக்கில் மோசடி!

# தென்மராட்சி மக்கள் கொதிப்பு

## மாவை சேனாதிராஜாவிடம் முறையீடு



(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர் க.அருந்தவபாலனின் விருப்பு வாக்கில் மோசடி நடந்துள்ளதாக தென்மராட்சி மக்கள் சமூகம் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவிடம் முறையீடு செய்துள்ளது.

நேற்று இரவு 8.30 மணியளவில் தென்மராட்சி மக்கள் சமூகப் பிரதிநிதிகள் சுமார் முப்பத்தைந்து பேர் மாவை சேனாதிராஜாவைச் சந்தித்து தமது முறைப்பாட்டை பதிவு செய்தனர்.

முதற்தடவை எண்ணலில் அருந்தவபாலன் கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தாராயினும் இரண்டாவது தடவையும் விருப்பு வாக்குகள் எண்ணப்படவேண்டும் என சிலர் வலியுறுத்தியதன் பேரில், 2-வது தடவை வாக்குகள் எண்ணப்பட்ட போது அருந்தவபாலன் ஆறாவது இடத்துக்கு தள்ளப்பட்டதாகவும் இது திட்டமிட்டு செய்யப்பட்ட சதி வேலை என்றும் அவர்கள் குற்றம்சாட்டினர்.

குறித்த விருப்பு வாக்குகள் எண்ணுமிடத்தில் கடமையில் இருந்த அதிகாரி ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு, அருந்தவபாலனின் விருப்பு வாக்கில் மோசடி செய்வதில் அந்த அதிகாரி ஈடுபட்டதாக, தென்மராட்சி மக்களின் சமூகப் பிரதிநிதி ஒருவர் மாவை சேனாதிராஜாவிடம் பகிரங்கமாகத் தெரிவித்தார். அருந்தவபாலனுக்கு தேசிய பட்டியலில் இடம் கொடுக்க வேண்டும் என்றும் மாவையிடம் கோரிக்கை விடுத்தனர்.

விருப்பு வாக்கில் ஐந்தாவது இடத்தில் வேட்பாளர் அருந்தபாலன் இருப்பதாக முதலில் அறிவிக்கப்பட்ட போதிலும் இரண்டாவது முறையும் விருப்பு வாக்கு எண்ணப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சிலர் முன்வைத்ததைத் தொடர்ந்து, இரண்டாவது எண்ணலின் போது அருந்தவபாலனின் விருப்பு வாக்கு ஆறாவது இடத்துக்கு நகர்ந்தமை தெரிந்ததே. (ந)


உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

ஶ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392

(சி-1835)


# சேவைநலன் பாராட்டு



## திரு. ஆறுமுகம் சிவபாதம்

(BA, PG Dip in Edu, Dip in Eng. Tea)

### சேவை விபரம்

1987 - 1991 - யா/சுதுமலை அ.த.க பாடசாலை
1992 - 1993 - யா/மானி.மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
1994 - 2010 - யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை
10.02.2010 - 19.08.2015 - யா/வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்

எமது கல்லூரியில் சிறந்த ஆங்கில ஆசானாக சேவையாற்றி 19.08.2015 இல் ஓய்வுபெற்றுச் செல்லுகின்ற ஆசிரியரை சகல நலன்களும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறையருளை நாடி ஆசி கூறி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர் :
யா/வைத்தீஸ்வராக் கல்லூரிச் சமூகம்

(1502)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கலைந்து போனது ஜே.வி.பியின் கனவு

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் குறைந்தது 30 ஆசனங்களையாவது கைப்பற்றி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக வேணடும் என்ற மக்கள் விடுதலை முனனணியின் கனவு கலைந்து போயுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களும் அதன் ஆதரவாளர்களும் அந்த கட்சியின் வெற்றிக்காக பாரிய பிரசாரங்களை முன்னெடுத்திருந்தனர்.

சமூக வலைத்தளங்களில் அந்தக் கட்சி மேற்கொண்ட பிரசாரம் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த பிரசாரத்தின் மூலம் பலன் கிடைக்காத நிலையில், மக்கள் விடுதலை முன்னணிக்கு பெரும் ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

குறைந்தது 30 ஆசனங்களை எதிர்பார்த்திருந்த மக்கள் விடுதலை முன்னணிக்கு தேர்தல் முடிவுகளின் படி 7 முதல் 8 ஆசனங்களே கிடைக்கும் என கணிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# ஜனாதிபதி- பிரதமர் விசேட சந்திப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையில் விசேட கலந்துரை யாடல் ஒன்று தற்போது ஜனாதிபதியின் உத்தி யோக பூர்வ இல்லத்தில் இடம்பெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பொது தேர்தல் முடிவுகள் வெளியாகி கொண்டுள்ள நிலையில் தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பிலே கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எப்படியிருப்பினும் கலந்துரையாடப்பட்டு வருபவைகள் தொடர்பில் இதுவரையிலும் எவ்வித தகவல் வெளியாகவில்லை.

இதேவேளை ஜனாதிபதி நேற்று விசேட உரையாற்றியதோடு நேற்று பிரதமர் விசேட அறிக்கை ஒன்றினை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ)

# யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட முடிவு

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| த.தே.கூ | 207577 | 69.12 | 5 |
| ஈ.பி.டி.பி | 30232 | 10.07 | 1 |
| ஐ.தே.க | 20025 | 6.67 | 1 |
| ஐ.ம.சு.கூ | 17309 | 5.76 | 0 |
| அ.இ.த.கா | 15022 | 5.00 | 0 |
| சுயேட்சைக்குழு 04 | 1979 | 0.66 | 0 |
| சுயேட்சைக்குழு 02 | 1706 | 0.57 | 0 |
| த.வி.கூ | 1515 | 0.50 | 0 |
| சுயேட்சைக்குழு 06 | 1442 | 0.48 | 0 |
| ஈ.ஜ.மு | 1277 | 0.43 | 0 |
| அ.இ.த.ம | 383 | 0.13 | 0 |
| ஐ.சோ.க | 303 | 0.10 | 0 |
| ஜனசெத பெரமுன | 250 | 0.08 | 0 |
| ம.வி.மு | 247 | 0.08 | 0 |
| ஸ்ரீ.ம.பக்ஷய | 246 | 0.08 | 0 |
| சுயேட்சைக்குழு 03 | 224 | 0.07 | 0 |
| சுயேட்சைக்குழு 05 | 201 | 0.07 | 0 |
| சோசலிச சமத்துவக் கட்சி | 142 | 0.05 | 0 |
| மு.சோ.க | 127 | 0.04 | 0 |
| சுயேட்சைக்குழு 01 | 67 | 0.02 | 0 |
| நவசிஹல உறுமய | 35 | 0.01 | 0 |
| செல்லுபடியானவை | 300309 | 92.17 | - |
| நிராகரிக்கப்பட்டவை | 25496 | 7.83 | - |
| வாக்களிக்கப்பட்டவை | 325805 | 61.56 | - |
| பதிவு செய்யப்பட்டவை | 529235 | - | - |

# மரண அறிவித்தல்



## அமரர் செல்லம்மா சின்னத்தம்பி

மயிலிட்டியை பிறப்பிடமாகவும் மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சின்னத்தம்பி 15-08-2015 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி (முன்னாள், ஊழியர் சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை) அவர்களின் பாசமிகு மனைவியும்

காலஞ்சென்ற கந்தையா அருமைப்பிள்ளையின் மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, செல்லாச்சி, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகநாதன் (கனடா), க.ராகினி ஆகியோரின் அன்புத் தாயாரும், கஜேந்திரன், வசி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் தர்சினி மற்றும் நிஷாந்தன், பபிஷான், கேஷனி, சாம், ஜெய்தா (கனடா) ஆகியோரின் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19.08.2015 புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

மதவடி ஒழுங்கை
சுதுமலை வடக்கு, சுதுமலை.
0779575620

தகவல்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(C-1828)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் தேவஸ்தான

## மன்மத வருட மஹோற்சவ விஞ்ஞாபனம்

## 20.08.2015



### விநாயகப் பெருமான் மெய்யடியார்களே!

தீவகத்தின் தலைத்தீவாய் விளங்கும் மண்டைதீவில் திருவெண்காடு எனும் புண்ணிய தலத்தில் எழுந்தருளி துயர் தீர்க்கும் கருணை வள்ளலாகிய ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானுக்கு நிகழும் மன்மத வருடம் ஆவணித் திங்கள் 3ஆம் நாள் (20.08.2015) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நிகழ சித்தி விநாயகப் பெருமான் திருவருள் பாலித்துள்ளார்.

**20.08.2015 வியாழக்கிழமை - கொடியேற்றம் - முற்பகல் 10.35 மணி**
**27.08.2015 வியாழக்கிழமை - வேட்டைத்திருவிழா - மாலை 4.30 மணி**
**சப்பைரதம் - மாலை 7.30 மணி**
**28.08.2015 வெள்ளிக்கிழமை - தேர் - பகல் 10.30 மணி**
**29.08.2015 சனிக்கிழமை - தீர்த்தம் - பகல் - 10.00 மணி**
**கொடியிறக்கம் - இரவு - 8.30 மணி**

- பத்துநாட்களும் விசேட நாதஸ்வர, தவில் கச்சேரிகளும், சமய சொற்பொழிவுகளும் பஜனைகளும் இடம்பெறும்.
- பத்து நாட்களும் அடியார்களுக்கு அன்னதானம் (மகேஸ்வர பூசை) வழங்கப்படும்

அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வருகை தருவதோடு, எம் பெருமானுக்கு வேண்டிய பால், தயிர் , இளநீர், புஷ்பம், பூமாலை, அறுகம்புல் முதலியவற்றை தந்துதவுமாறு வேண்டுகிறோம்.

*சித்திவிநாயகரின் பெருவிழாக் காண வாரீர் வாரீர்...*
*அழகொழுகும் திருக்கோலம் பாரீர் பாரீர்...*

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

திருவெண்காடு, மண்டைதீவு.
T/P. No : 021 321 3937
Wed add - www.thiruvenkadumandaitivu.com

(C-1848)
பொ.வி.திருநாவுக்கரசு
இரத்தினசபாபதி யோகநாதன் (இந்திரன்)
ஆலய தர்மகர்த்தாக்கள்
மற்றும் மஹோற்சவ உபயகாரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடிச் சலுகை

**வலம்புரியின் அதிரடிச் சலுகை**

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு


மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

**தொடர்புகளுக்கு :-**
**021 221 7603,**
**021 321 0815**
**021 567 1543**

Valampurii@yahoo.com


# நல்லொழுக்கம் மிக்க நாடு கட்டியெழுப்பப்படும்!

## ரணில் உறுதியளிப்பு



கடந்த ஜனவரி மாதம் 08 திகதியின் புரட்சியை தொடர்ந்து முன னோக்கி கொண்டு செல்வ தோடு நல்லாட்சி மற்றும் கொள்கை களை முன் னோக்கி கொண்டு செல்வதற்கு இந்நாட்டின் பெரும்பான்மை மக்க ளின் அனுமதி கிடைத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

விசேட அறிக்கை ஒன்றினை வெளியிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனை குறிப்பிட் டுள்ளார்.விசேட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிரு ந்ததாவது,

சுதந்திரமான மற் றும் நியாயமான தேர் தல் நடத்துவதற்கு சமாதானமான சூழ்நி லையை இத் தேர்த லில் உருவாக்கி கொள் வதற்கு முடிந்துள் ளது. தற்போது வெற் றியாளர்களையும் தோல்வி யாளர்களையும் பிரித்து கொள்வதே அவசியம். கொள்கையுடைய அரசாங்கம் ஒன்றை கட்டியெழுப்புவதோடு அனைவருக் கும் சம வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய புதிய நாடொ ன்றை உருவாக்குவதாக பிரதமர் ரணில் விக் கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 64 செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர்
தொ.இ: B/3998

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 12
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/3999

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 39 சூரிசெவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BSC, MSC/ ஆசிரியர்
தொ.இ: B/4000

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 26 1/2
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L (பிரான்ஸ்)
தொ.இ: B/024

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 53
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: G040

பிறப்பு: 1977 RC
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 31 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில்: BA/ அரச தொழில்
தொ.இ: G/041

பிறப்பு: 1974 RC
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 6 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: G/042

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 11 3/4
உயரம்: 5'
தகைமை/தொழில்: BSC
தொ.இ: G/044

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



30 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ் **கலாலயா** பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். **(கிழமை நாட்களில் மட்டும்)**

சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-


# ராசி பலன்

19.08.2015
(ஆவணி 02, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பஞ்சமி முழுவதும்
அத்தம் பிற்பகல் 12.25 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை
சுபநேரம் 4.35- 6.05 மணிவரை
நல்லைக் கந்தன் கொடியேற்றம்
**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| கேது சந் | | | |
| | இரவு 1.40 இற்கு துலா-சந் | | செவ் |
| | | | குரு சுக் புதன் |
| | | சனி | ராகு |

**மீனம்:** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்,தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், கனவு பலிதமுண்டு,நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**மேடம்:** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், அன்பு நண்பர்களின் சந் திப்பு இடம்பெறலாம், உடல் நலம் சீராகும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப் புண்டு.

**இடபம்:** குடும்பத்தினரின் பேரன்பை பெறுவீர்கள், தனவரவு திருப்தி கரமாக அமையும், எதிர்கால நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், சந்தோச மான அனுபவங்கள் ஏற்பட லாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு.

**கும்பம்:** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டியநாள்,நண்பர்கள் மனங்கோ ணாது நடந்து கொள்வது நல் லது,வேலைச்சுமை அதிகரிக்கும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**கடகம்:** இல்லத்தில் இனிய சம்பவங் கள் இடம்பெறலாம், சகோதர ஒற்றுமை மேலோங்கும், அடு த்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய திட்ட ங்கள் கைகூடும்.

**மகரம்:** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு,தேகநலனில் தெளிவு பிறக்கும், ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்,ஆன்றோர் சந்திப் புண்டு.

**சிம்மம்:** சுற்றத்தார் மூலம் சுப செய்தி கள் வந்து சேரலாம், ஆடம்பர பொருட்களை வாங்குவதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோ ங்கும் நாள்.

**தனுசு:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், தனவரவுகள் திருப்திகரமாக அமை யும்,உறவினர்களின் உதவிகள் கிடை க்கலாம்.

**விருச்சிகம்:** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்,சொல்லை செயலாக்கி காட்ட முற்படுவீர்கள்,தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், உறவினர் பகை அகலும்.

**துலாம்:** தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவா கும்,இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், பிரியமான வர்களின் சந்திப்புகள் இடம்பெற லாம்.

**கன்னி:** பெரிய மனிதர்களின் தொடர் பால் விரும்பிய காரியம் ஒன்றை நிறைவேற்றும் சூழ்நிலை அமை யலாம், ஆரோக்கியம் சம்பந் தப்பட்ட வகையில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனோன்மணி சனசமூக நிலைய ஆதரவுடன் பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் மனோன்மணி பாலர் பாடசாலையின் விளையாட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. பாடசாலை ஆசிரியை பெ.ஜெயந்தினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட விரிவுரையாளர் என்.உமாகாந்தன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கொக்குவில் மத்தி கிழக்கு ஜே/126 கிராம உத்தியோகத்தர் செல்வி ம.குணரட்ணம் மற்றும் பாலர் கல்விக்கழகச் செயலாளர் திருமதி.தெ.இரண்டகோபால் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினர் சிறார் ஒருவருக்கு வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதையும் சிறார்களின் இடைவேளை உடற்பயிற்சி நிகழ்வின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.

## தெய்வீக இசையரங்கில் திருமுறைக் கச்சேரி

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.45 மணிக்கு கே.எஸ். ஆர்.திருஞான சம்பந்தனின் திருமுறைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. பாடல் செல்வி க.சித்திரா, ஆர்மோனியம் ந.செல்வச்சந்திரன், மிருதங்கம் தா.வேல்மாறன், கடம் அ.செல்வரத்தினம் ஆகியோர் வாசிக்கவுள்ளனர். (இ-3)

## பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

தென் கோவை அருள்மிகு கற்பக விநாயக ஆலய பாலஸ்தாபன விஞ்ஞாபனம் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாலஸ்தாபனம் இடம்பெறவுள்ளது. (இ-5-136)

## ஹயஸ் மதிலுடன் மோதிய விபத்தில் பலி எண்ணிக்கை 3 ஆக அதிகரிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-மீசாலை புத்தூர் சந்திப்பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஹயஸ் வாகன விபத்தில் பலி எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

ஹயஸ் வாகனம் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் சம்பவ இடத்தில் சாரதி உட்பட இருவர் உடல் நசுங்கிப் பலியாகியிருந்தனர்.

ஐவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலை யில் சம்பவ தினத்தன்று இரவு பெண் ணொருவரும் சிகிச்சை பயனளிக் காது உயிரிழந்துள்ளார்.


இதில் மானிப்பாய் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிறிகாந்தவேல்-விஜயமலர் (வயது-61) எனும் பெண்ணே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இம்மாதம் நடைபெறவுள்ள திருமண நிகழ்வுக்காக சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த மணமகனது வாகனமே விபத்தில் சிக்கியது எனவும் சம்பவ தினத்தன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து குறித்த வாகனம் வருகை தந்தது எனவும் தெரியவந்தது.

உறக்கம் காரண மாக சாரதி திடீரென கண்மூடிய மையே விபத்துக்கு காரணம் என தெரிய வருகிறது. (இ-5-29)

## தனியார் பேருந்து ஆட்டோ விபத்து

(சாவகச்சேரி)



தனியார் பேருந்து- ஆட்டோ விபத்தில் ஆட்டோ சாரதி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி விபத்துச்சம்பவம் நேற்று பிற்பகல் 2மணியளவில் சாவகச்சேரி ஏ-9 வீதி நுணாவில் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தனியார் பேருந்தும் அதேவழியில் சென்ற ஆட்டோவுமே விபத்துக்குள்ளாகின.

ஆட்டோவின் வேகத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியாத குறித்த ஆட்டோச்சாரதி முன்னால் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தை மோதியதில் விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்துச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்துக்குள்ளான ஆட்டோவின்முன்பக்கக்கண்ணாடி மிகவும் சேதமடைந்துள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5-29)

## நல்லூர்க் கந்தனின் மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்

வரலாற்றுப் புகழ்பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இன்று முதல் 25 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது. கொடியேற்றத்துக்கான கொடிச் சீலை நேற்றைய தினம் ஆலயத் துக்குக் கொண்டுவரப்பட்டது. நேற்றுக்காலை 7.30 மணிக்கு மங்கள வாத்தியங்கள் சகிதம் ஆலயத்துக்கு கொடிச்சீலை எடுத்து வரப்பட்டு ஆலய பிரதான சிவாச்சாரியாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு கொடி யேற்றத் திருவிழா நடைபெறவுள்ளது. தொடர்ந்து 25 நாட்களும் விசேட பூஜைகள் நடைபெற்று சுவாமி வெளிவீதியுலாவும் இடம்பெறவுள்ளன.

இம்மாதம் 28 ஆம் திகதி 10 ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா எதிர்வரும் செப்டம்பர் மாதம் 3 ஆம் திகதி 16 ஆம் திருவிழாவான அருணகிரிநாதர் உற்சவமும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி 17 ஆம் திருவிழாவான கார்த்தி கைத் திருவிழாவும், எதிர்வரும் 6ஆம் திகதி 19 ஆம் திருவிழாவான சூர்யோற்சவமும், செப்டம்பர் மாதம் 7ஆம் திகதி 20 ஆம் திருவிழாக்களான சந்தான கோபாலர் திருவிழாவும் மாலை 5 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும், செப்டெம்பர் 8 ஆம் திகதி கஜவல்லி மஹாவல்லி , வேல்விமானத் திருவிழாவும் செப்டெம்பர் 9 ஆம் திகதி தண்டாயுதபாணி உற்சவமும் ஒருமுகத்திருவிழாவும் செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி சப்பறமும் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி காலை 7 மணிக்கு தேர் திருவிழாவும் 12 ஆம் திகதி காலை 7 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும நடைபெறும். (இ-9)




## முத்திரையிடல்

(கரணவாய்)

பருத்தித்துறை- புலோலி பிரதேச சபைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடல் நடவடிக்கை எதிர்வரும் 24 ஆம் திகதி மற்றும் 25 ஆம் திகதிகளில் புலோலி பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை - புலோலி பிரதேச சபைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மேற்குறித்த திக திகளில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை தங்களது நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரியிட முடியுமென பருத்தித்துறை புலோலி பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-5-60)

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நல்லூரில்

யாழ்.மருதனார்மடம் இராம கிருஷ்ணமிசன் நலன்புரி நிலையத்தின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் உள்ள மூத்ததம்பி மடத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வினை கொழும்பு இராமகிருஷ்ண மிசன் துறவியான ஸ்ரீமத் சுவாமி ரிதமயானந்தர் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

நல்லூர்க்கந்தன் பெருந் திருவிழா இன்று கொடியெற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் உற்வசகால சிறப்பு நிகழ்வாக இடம் பெறுவதற்கு இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய உற்சவகாலங்களில் தினமும் மாலை 4 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை மேற்படி நிகழ்வு இடம்பெறும்.

சப்பறம், தேர், தீர்த்தம் ஆகிய உற்சவ காலத்தில் காலை 7 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை நடைபெறவுள்ளது. இவ் விற்பனைக்கூடத்தில் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் மாதாந்த சஞ்சிகை உட்பட ஆன்மீகம், ஆளுமை வளர்ச்சி தொடர்பான சிறுவர், மாணவர் மற்றும் பெரியோர்களுக்கான புத்தகங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.


எனவே அனைவரையும் இப்புத்தகக்கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடத்திலும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5)




இலங்கை வங்கியின் 76 ஆவது ஆண்டு விழாவையொட்டி திருநெல்வேலி இலங்கை வங்கிக் கிளையில் இரத்ததானம் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது. இரத்ததானம் செய்யப்படுவதையும் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட வணிகத்துறை தலைவர் க.தேவராஜா உரை நிகழ்த்துவதையும் அருகில் கிளை முகாமையாளர் த.பிறீதிவிராஜ் மற்றும் சி. திருபாகரக்குருக்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் சம்பந்தனுக்கு வெற்றி



**(கொழும்பு)**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திருகோணமலை மாவட்டத்தில் 33 ஆயிரத்து 834 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ளார்.**

திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டவர்களில் ஐ.தே.க. சார்பில் எம். மஹ்ரூப் 35ஆயிரத்து456 விருப்பு வாக்குகளையும் இம்ரான் மஹ்ரூப் 32ஆயிரத்து 582 விருப்பு வாக்குகளையும் பெற்றும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் சுசந்த புஞ்சிநிலமே 19 ஆயிரத்து 953 விருப்பு வாக்குகளைப் பெற்றுத் பெற்றுத் தெரிவாகியுள்ளார். (இ-7)

# குவைத் பெற்றோல் சுத்திகரிப்பு ஆலையில் பயங்கர தீ விபத்து

குவைத் நகரின் மையப் பகுதியில் உள்ள அரசுக்கு சொந்தமான அல் ஷுஜபா பெற்றோல் சுத்திகரிப்பு ஆலையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

உள்ளூர் நேரப்படி நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நிகழ்ந்த இந்த தீ விபத்து பற்றிய தகவல் அறிந்ததும் ஏராளமான வாகனங்களில் விரைந்துவந்த தீயணைப்பு படையினர் தீயை அணைக்கும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆலையின் பிறபகுதிகளுக்கு தீ பரவாமல் இருக்க தேவையான தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அந்த சுத்திகரிப்பு ஆலை தொழிலாளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டதாகவும் குவைத் தேசிய பெற்றோலிய நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 160 | 160 |
| தக்காளி | 100 | 100 | 100 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 60 | 80 | 100 | 80 |
| கரட் | 120 | 150 | 160 | 120 |
| பூசணி | 40 | 60 | 50 | 40 |
| புடோல் | 40 | 20 | 60 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 110 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 20 | 40 | 60 | 30 |
| லீக்ஸ் | 100 | 80 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 100 | 100 | 100 |
| போஞ்சி | — | 150 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 80 | 60 | 60 |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 20 | 10 |
| தேசிக்காய் | 30 | 50 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 40 | 35-40 | 40 |
| இராசவள்ளி | — | 140 | — | 120 |
| வெங்காயப்பூ | 100 | 200 | 200 | 160 |
| முள்ளங்கி | 40 | 30 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 25 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

# மகிந்த ராஜபக்ஷவின் குருநாகல் வருகையால் ஐ.ம.சு.முன்னணி இரு ஆசனங்களை இழந்தது

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இந்த மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களை இழந்துள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 10 ஆசனங்களை கைப்பற்றியிருந்தது. எனினும் இம்முறை தேர்தலில் 8 ஆசனங்களை மாத்திரம் கைப்பற்றியுள்ளது.


கடந்த 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்த்லில் 5 ஆசனங்களை கைப்பற்றிய ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை 7 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது.

ஆக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து சென்று குருநாகலில் போட்டியிட்ட நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மாவட்டத்தில் வெற்றி பெற்றாலும் தன்வசம் இருந்த இரண்டு ஆசனங்களை கோட்டை விட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 464

Search for people, places and things Nagendram Home

மகிபன் தீபன்




சங்கர் நிறோ




குணா குணாலன்




சுரேஸ் கௌரி




அம்பி டைகர்




தமிழ்மதி மானசா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வன்னித் தேர்தல் தொகுதியில்

## த.தே.கூ-4, ஐ.தே.க-1, ஐ.ம.சு.மு-1

(மல்லாவி)

நாடு தழுவிய ரீதியில் 8 ஆவது பாராளுமன்றத்திற்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக நேற்று முன்தினம் காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை வாக்களிப்பில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர்.

இதற்கமைய வன்னித் தேர்தல் தொகுதியில் உள்ளடங்கியுள்ள முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 53 ஆயிரத்து 58 வாக்காளர்கள் 334 வாக்குச் சாவடிகள் மூலமாக ஆறு பாராளுமன்ற பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பை மேற்கொண்டனர்.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 130 வாக்களிப்பு நிலையங்கள் ஊடாக 63 ஆயிரத்து 920 வாக்காளர்களும் மன்னார் மாவட்டத்தின் 70 வாக்குச் சாவடிகள் ஊடாக 79 ஆயிரத்து 433 வாக்காளர்களும் வவுனியா மாவட்டத்தில் 134 வாக்குச் சாவடிகள் ஊடாக ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 705 வாக்காளர்களும் வாக்களிப்பு செய்வதற்கான ஏற்பாடுகளை தேர்தல் திணைக்களம் மேற்கொண்டது.

ஆயினும் இறுதி நேர வாக்களிப்பு வீதத்தின்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் 70 வீதமும் வவுனியா மாவட்டத்தில் 69 வீதமும் மன்னார் மாவட்டத்தில் 71வீதமும் வாக்களிப்பு காணப்பட்டது.

இதன்படி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் நான்கு பிரதிநிதிகளும் ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரு பிரதிநிதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த ஒரு பிரதிநிதியுமாக மொத்தம் ஆறு பேர் தெரிவாகியுள்ளனர்.

வாக்களிப்பு முடிவுற்ற மாலை 4 மணியிலிருந்து நேற்று மாலை 3 மணி வரையிலான காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் அரசியல் கட்சி ஒன்றினால் எதிரணி கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் உட்பட ஆங்காங்கே சிறு சம்பவங்களைத் தவிர பெரியளவிலான குற்றச்செயல்கள் எதுவும் வன்னித்தேர்தல் தொகுதியில் பதிவாகவில்லையென பொலிஸ் திணைக்களத்தின் தகவல்கள் ஊடாக அறிய முடிகின்றது. (2-15)




# அனைவருக்கும் வீட்டுத்திட்டம் கிடைக்க நடவடிக்கை எடுங்கள்

### பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல கிராமங்களில் வசிக்கின்ற நிரந்தரமாக வதிவிடத்தைக் கொண்ட மக்கள் சிலருக்கு இது வரை வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லையென கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வன்னி யுத்தம் முடிவடைந்த பின்னர் மீளக் குடியமர்ந்த நிரந்தர வதிவிடங்களைக் கொண்ட மக்களின் ஒரு பகுதியினர் தமக்கான வீடுகளில் குடியிருப்பதற்காக ஓரளவு திருத்தம் செய்து குடியேறினர்.

இவர்களினது வீடுகள் திருத்தம் செய்யப்பட்டதாக தெரிவித்து வீட்டுத்திட்ட உதவிகள் நட்ட ஈட்டுத் தொகைகள் என்பன எதுவும் வழங்கப்படாத நிலையில் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதாக கவலை தெரிவிக் கின்றனர்.

இவர்களுக்கான உதவித்திட்டங்கள் வழங்குவதற்கு ஏற்ற வகையில் தரவுகள் பெறப்பட்டதா, அவ்வாறாயின் தமக்கு வீட்டுத் திருத்தங்களுக்கான ஒழுங்குகள் எதுவும் இது வரை மேற்கொள்ளப்படவில்லையென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வீடு என்பது தமக்கான வாழ்வாதாரத்திற்கு அவசியமானது என்பதை கருத்திற்கொண்டு வீடுகளுக்கான உதவித்திட்டங்கள் கிடைக்கப்பெறாதவர்களின் தரவுகளை கிராமங்கள் ரீதியாக கண்டறிந்து அனைவருக்கும் வாழ்விட வசதிகள் கிடைக்கப்பெற உரியவர்கள் முன்வந்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள பல கிராமங்களையும் சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-254)

# மின்னொழுக்கு; குடும்பஸ்தர் பலி!

(மல்லாவி)

வவுனியாவில் ஓட்டுத் தொழிலகம் ஒன்றில் ஏற்பட்ட திடீர் மின்னொழுக்கு காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30மணியளவில் பூந்தோட்டம் பகுதியில் நடைபெற்றது.

இதில் எஸ்.ரவிச்சந்திரன் (வயது-48) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பூந்தோட்டம் சாந்தசோலை வீதியில் அமைந்துள்ள வாகன திருத்தகம் ஒன்றுடன் இணைந்த ஓட்டுத்தொழிலகத்தின் உரிமை யாளர் ஒருவர் கடையைத் திறந்து வேலையை ஆரம்பித்த போது திடீரென கடையினுள் மின்னொழுக்கு ஏற்பட்டு அவரைத்தாக்கியது.

இதன்போது பிரஸ்தாப நபர் சம்பவ இடத்தில் பரிதாபமாக உயிரிழந்தார்.

இவரது மரணச்செய்தியைக் கேட்ட மனைவி அதிர்ச்சி காரணமாக மயங்கிய நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (2-15)

## புகையிரதங்களின் மலசலகூடங்களின்

# நீர்க்குழாய்களை சேதப்படுத்துகின்ற விசமிகளுக்கு எதிராக நடவடிக்கை

### புகையிரத திணைக்களம் எச்சரிக்கை

(மல்லாவி)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான தபால் புகையிரத சேவையில் ஈடுபடுகின்ற புகையிரதங்களின் மலசல கூடங்களின் நீர்க்குழாய்களை விசமிகள் அடிக்கடி சேதப்படுத்தி வருகின்றனர்.

இதனால் புகையிரதத்தின் நீர்த் தாங்கியில் நீரை சேமித்து பயணத்தை தொடர முடியாது இருப்பதால் மலசலகூடத்தை பாவிக்கும் பயணிகள் அவல நிலைப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இரவு நேர தபால் புகையிரத சேவையில் ஈடுபடுகின்ற புகையிரதத்திலேயே இந்த அவல நிலை காணப்படுகின்றது.

குறித்த புகையிரதம் யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் தரித்து நின்ற போது அதனுள் ஏறி பார்வையிடுகின்ற சில விசமிகள் மலசலகூடங்களில் இருக்கின்ற குழாய்களை சேதப்படுத்துவதுடன் நீர் வெளியேற்றும் உபகரணங்களையும் களவாடிச் செல்கின்றனர்.

இதனால் புகையிரத நீர்த்தாங்கியில் நீரை சேமித்துக் கொண்டு பயணிக்க முடியாது உள்ளது. இதனால் புகையிரதத்தில் பயணத்தை மேற்கொள்கின்ற பயணிகள் மலசல கூட பாவனைக்கு நீரைப் பயன்படுத்த முடியாத அவலநிலை காணப்படுவதுடன் மலசல கூடமும் அசுத்தமடைந்து துர்நாற்றம் வீசுவதால் பயணத்தை மேற்கொள்ளும் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இதேபோன்று வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரை அமைக்கப்பட்டுள்ள புகையிரத நிலையங்களில் காணப்படுகின்ற மலசலகூடங்களின் நீரினை வெளியேற்றும் கருவிகளை விசமிகள் களவாடும் நிலை காணப்படுகின்றது.

இதனை பல தடவைகள் புகையிரத திணைக்களத்தினர் திருத்தம் செய்த போதும் மீண்டும் மீண்டும் அதனை விசமிகள் களவாடிச் செல்வதாகவும் புகையிரத திணைக்கள தகவலில் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே பொதுமக்கள் சேவையில் ஈடுபடுகின்ற குறித்த புகையிரதத்திலும் மற்றும் புகையிரத நிலையங்களில் உள்ள மலசல கூடங்களிலும் காணப்படுகின்ற நீர்க்குழாய்களைச் சேதப்படுத்தி கருவிகளைக் களவாடி வரும் விசமிகளுக்கு எதிரான கண்காணிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்டவர்களை புகையிரத பாதுகாப்பு பொலிஸாரின் உதவியுடன் கைது செய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தவுள்ளதாகவும் புகையிரத திணைக்கள அதிகாரிகள் இது தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு தெரிவித்தனர். (2-15)

# வாக்கு சாவடிகளுக்கு முன்பாக பலத்த பாதுகாப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சுமுகமான முறையில் தேர்தல் இடம்பெற்றபோதும் எருக்கலம்பிட்டி, பேசாலை ஆகிய கிராமங்களில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் பின்னர் அவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களை விட இம்முறை பலத்த பொலிஸ் பாதுகாப்பும் மற்றும் பொலிஸ் ரோந்து நடவடிக்கை இடம் பெற்றதுடன் வீதிகளிலும் வாக்கு சாவடிகளுக்கு முன்பாகவும் மக்கள் குடியிருப்பதை பொலிஸார் தடை செய்ததையும் காணக்கூடியதாக இருந்தது

தாரபுரம் வாக்குச்சாவடியில் பெண்ணொருவர் வாக்களிக்க சென்றபோது ஏற்கனவே வாக்களிக்கப்பட்டவர் என தெரிவித்த அவர் திருப்பி அனுப்பப்பட்ட போது இச்சம்பவம் தேர்தல் கண்காணிப்பு குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதகு, பாலத்தின் வேலைகள் இதுவரை பூர்த்தியாகவில்லை

(கண்டாவளை)

**ஏ-35 பரந்தன் முல்லை வீதியில் புளியம்பொக்கணை சந்திக்கு அருகாமையிலுள்ள மதகு வேலையும் நெத்தலியாற்றிற்கு குறுக்காக அமைக்கப்பட்டுள்ள பாலமும் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் புனரமைப்பு வேலைகள் மற்றும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டும் இதுவரை பூரணப்படுத்தப்படாமல் காணப்படுவதாக பயணிகள், பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

இதனால் கடந்த வருட மாரி காலத்தின் போது மேற்படி மதகு மற்றும் பாலத்தின் ஊடாக இரணைமடு, கல்மடு ஆகிய குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்தமை காரணமாக மேலதிக மழை நீர் தொடர்ச்சியாக வெளியேறிக் கொண்டிந்தமையால் ஏ-35 வீதியூடான போக்குவரத்து சேவை முற்றாக பாதிப்படைந்திருந்தது.

மேற்படி மதகின் புனரமைப்பு வேலையும் பாலத்தின் நிர்மாணப் பணியும் இவ்வருடமும் மேற்கொள்ளப்படவில்லையென பயணிகள், பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே மாரிகாலம் அண்மித்துள்ள நிலையில் மதகினையும் பாலத்தின் நிர்மாண வேலைகளையும் பூர்த்தி செய்து இடையூறின்றி பயணிகள் பயணத்தை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென பொதுமக்களும் பயணிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-263)

# வாக்கு மோசடியில் ஈடுபட முனைந்த நபர் கைதானார்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு முள்ளியவளை ஹிஜ்ராபுரம் வாக்குச் சாவடியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் வாக்கு மோசடியில் ஈடுபட முனைந்த நபர் ஒருவர் வாக்குச் சாவடி அதிகாரிகளினால் அடையாளம் காணப்பட்டு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவரை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக முள்ளியவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்து தெரியவருவதாவது,

கட்டாரில் வசித்துவரும் ஹிஜ்ராபுரத்தைச் சேர்ந்த சுல்த்தான் அப்துல் காதர் முகமது (வயது-38) என்ற பெயரையுடைய தேசிய அடையாள அட்டையுடன் வாக்குச் சாவடிக்கு சென்ற நபர் இவரின் பெயரில் வாக்களிக்க முனைந்துள்ளார். அப்போது வாக்குச் சாவடியில் இருந்த கட்சி முகவர் ஒருவர் குறித்த பெயருக்குரிய வர் கட்டாரில் வசிப்பதாக ஆட்சேபனை தெரி வித்தார்.

இதற்கமைய வாக்குச் சாவடி அதிகாரி விசாரணை செய்த பின்னர் மேலதிக விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்தார். இதன் பின்னர் குறித்த நபர் முள்ளியவளை பொலிஸ் நிலையம் அழைத்துச் சொல்லப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார்.

தேர்தல் விசேட சட்டத்தின்படி இவருக்கு பொலிஸ்பிணை வழங்கப்படமாட்டாது. குறித்த நபர் ஐ.தே.கட்சி ஆதரவாளர் எனவும் ஆலங்குளம் நுரைச் சோலையைச் சேர்ந்த சினுஸ் ஆப்தீன் முகமட் பைசல்(வயது-28) எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார். (2-302)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்க உபகரணங்கள்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள 30 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சுய உற்பத்திகளை ஊக்குவிக்கும் பொருட்டு உபகரணங்கள் நிலையான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினர் அண்மையில் வழங்கி வைத்துள்ளனர்.

இது தொடர்பாக தெரியவருவதாகவது,

பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு தலா 8 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியானசுயஉற்பத்திகளைஊக்குவிப்பதற்கான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பயனாளிகளுக்கு இரசாயன கலப்படமற்ற மரக்கறி வகைகளை உற்பத்தி செய்வதை நோக்கமாகக்கொண்டும்மற்றும்பால் பொருட்கள் பயன்பாடு தொடர்பாகவும் வழங்கப்பட்ட பயிற்சிகளைத் தொடர்ந்து இந்த உபகரணத் தொகுதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் எதிர்காலத்தில் இரசாயன கலப்படமற்ற உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி அதிகம் உள்ளதாகவும் இதன்மூலம் மேற்படி குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியுமென இந்நிகழ்வில் கலந்துகொண்டு உபகரணங்களை வழங்கி வைத்து உரையாற்றிய நிலையான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் கலாநிதி லயன். வீரக்கோன் தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன், கிராம அலுவலர் கள், பொது மக்கள் எனப் பலதரப்பினரும் கலந்துகொண்டனர். (2-15)





முன்னாள் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் மு.சந்திரகுமாரின் மக்களை நோக்கிய பாராளுமன்ற உரைகள் அடங்கிய "வாழ்வை மீட்கும் குரல், வாழ்வுக்கும் விடுதலைக்கும்" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் பச்சிலைப் பள்ளி பலநோக்கு கூட்டுறவு சங்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றதைப் படங்களில் காணலாம்.

# சட்டவிரோத மணல் அகழ்வு விவசாய நிலங்கள் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தின் பன்னங்கண்டி மற்றும் தட்டுவன் கொட்டிய ஆகிய பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்றுவருவதால் பெருமளவான விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குறித்த பகுதிகளில் உள்ள பயிர்ச்செய்கை நிலங்களில் இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் பாரிய அளவில் மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனால் பயிர்ச் செய்கை நிலங்கள் பாதிக்கப்பட்டு எதிர்காலத்தில் எந்த பயிர்ச்செய்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே, இதனைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த விடயத்தில் விசேட நடவடிக்கை மூலம் கவனம் செலுத்தப்பட்டு சட்டவிரோத மணல் அகழ்வுகளைத் தடுக்கும் வகையில் பலர் கைது செய்யப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2)




# பாலங்களின் விபரங்கள் கோரப்பட்டுள்ளன

வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட வீதிகளில் அமைந்துள்ள பாலங்களின் விபரங்களை வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு செயலரினால் கோரப்பட்டுள்ளது.

இதற்கமைய வடமாகாணத்தில் உள்ள சகல நகர சபைகள் பிரதேச சபைகளிடம் இருந்து விபரங்கள் முழுமையாக கோரப்பட்டுள்ளன.

கிராமிய பாலங்களின் நீளம், அகலம் அமைந்துள்ள இடம், வரைபடம் போன்ற விபரங்களுடன் அனுப்பி வைக்குமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# அறுவடைக்கு தயார் நிலையிலுள்ள வயல் நிலங்களினுள் கால்நடைகள் நுழைந்து பயிரழிவை ஏற்படுத்துகின்றன

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஆதங்கம்

(கண்டாவளை)

கல்மடு குளத்தின் கீழான நீர்ப்பாசன எல்லைக்குட்பட்ட காணிகளில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடை நடைபெற்று வருகின்றது.

இவ்வாறு சிறுபோக நெல் அறுவடை நடைபெற்று வருகின்ற வேளையில் கால்நடைகள் வயல் நிலங்களினுள் நுழைந்து நெற்பயிரை நாசம் செய்து வருவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கால்நடைகள் மேய்ச்சலுக்காக கட்டுப்பாடின்றி அவிழ்த்து விடப்பட்டுள் ளதால் அவை அறுவடைக்குதயாராகவுள்ளவயல்நிலங்களினுள் உள் நுழைந்து மிதித்து சேதப்படுத்தி வருவதாக விவசாயிகள் தெரி விக்கின்றனர்.

ஏற்கனவே அறுவடை செய்த விவசாயிகளும் தமது கால்நடைகளைக் கட்டுப்படுத்தாமல் அவிழ்த்து விட்டுள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை காலம் தாழ்த்திய விதைப்பை மேற்கொண்டோரும் கூடிய மாத இன நெல்லை விதைத்தவர்களும் இதனால் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நெல் விதைப்பில் ஈடுபடும் பெரும்பாலான விவசாயிகளிடம் கால்நடைகளும் காணப்படுகின்றன. கால்நடைகளை பட்டியாக வைத்து வளர்த்து வருவோர் அவற்றை ஓரளவு கட்டுப்படுத்தி வைத்திருந்தாலும் ஒரு சில கால்நடைகளை வளர்ப்போர் அவற்றை கட்டுப்பாடின்றி அவிழ்த்து விடுகின்றனர். இதனால் அவை நெற்பயிரை மேய்ந்து நாசப்படுத்தி வருகின்றன.

நெல் விதைப்பு ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து அறுவடை முடிவு பெறும் காலம் வரை கால்நடைகளை பட்டிகளிலும் வீடுகளிலும் அடைத்தும் கட்டியும் பராமரிக்குமாறு அந்தந்தப் பகுதி கமக்கார அமைப்புக்களினால் அறிவிக்கப்பட்டும் அறுவடை முடிவதற்கு முன்னரேஅவை மேய்ச்சலுக்காக அவிழ்த்து விடப்படுவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். பயிரழிவை செய்யும் கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கு உரிய அமைப்பினர் நட வடிக்கை எடுக்காதது ஏன் என பாதிக்கப்பட்ட விவசாயிகள், கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே பயிரழிவை ஏற்படுத்தும் கால்நடைகளை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்திசாலி அணில்!

ஒரு தோப்பில் ஏராளமான கொய்யா மரங்கள் இருந்தன. அந்த கொய்யா மரம் ஒன்றில் அணில் வசித்து வந்தது.

ஒருநாள், கொய்யா மரத்தில் அமர்ந்தபடி நன்கு கனிந்த கொய்யாப்பழம் ஒன்றினை சாப்பிட்டுக் கொண்டிருந்தது அணில்.

அந்த நேரத்தில் தோப்பினுள் குரங்கு ஒன்று நுழைந்தது. கொய்யாமரத்தில் இருந்த கொய்யாப்பழங்களை எல்லாம் பார்த்ததும் மிகவும் ஆச்சர்யமடைந்தது.

உடனே அது தன் கண்ணில் கண்ட கொய்யாப் பழங்களை எல்லாம் தாவி, தாவிப் பறித்தபடி தோப்பில் சுற்றித் திரிந்தது.

குரங்கானது கொய்யாப்பழங்களை எல்லாம் நாசம் செய்வதைப் பார்த்ததும் அணில் மிகவும் கவலையடைந்தது.

"குரங்கே! கொய்யாப் பழங்களை எல்லாம் இப்படி நாசப்படுத்துகிறாயே! உனக்குத் தேவைப்படுகிற கொய்யாப் பழத்தை மட்டும் சாப்பிட்டுச் செல்லலாமே!" என்றது.

"அணிலே! இந்தத் தோப்பு உனக்கே சொந்தமானது என்று நினைத்துக் கொண்டாயா? நான் என்னுடைய விருப்பப்படி எப்படி வேண்டுமானாலும் நடந்து கொளவேன்.'

என் நண்பர்களை எல்லாம் அழைத்து வந்து இந்த கொய்யாப் பழங்களை எல்லாம் சேதப்படுத்துவேன். நீ அந்தக் காட்சியைப் பார்!" என்று கூறியபடி கோபத்துடன் அந்தத் தோப்பை விட்டு வெளியேறியது.

"குரங்கிடம் நாம் நியாயத்தை தானே எடுத்துரைத்தோம்! ஆனால், அதோ நம்மீது தேவையில்லாமல் ஆத்திரப்பட்டு நண்பர்களையும் அழைத்து வந்து கொய்யாப்பழங்கள் எலலாம் சேதப்படுத்துவேன் என கூறிச் செல்கிறதே! ஒருவேளை அது தன்னுடைய நண்பர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு வந்து கொய்யாப்பழங்களை சேதப்படுத்தி விடுமோ... இதனை நாம் உடனடியாக தடுத்து நிறுத்திட வேண்டும்" என்று மனதிற்குள் நினைத்தது அணில்.



உடனே தோப்பை விட்டு வேகமாக புறப்பட்ட அணில், ஓர் மலைப்பகுதியை வந்தடைந்தது. அந்த மலைப்பகுதியில் ஓர் பாறையின் மீது கழுகு ஒன்று அமைதியுடன் அமர்ந்திருந்தது.

அணில் அமைதியுடன் அந்தக கழுகின் முன்னே போய் நின்றது.

"கழுகாரே வணக்கம்!" என்றது அணில்.

"அணிலே! வா! வா! நலமாக இருக்கிறாயா? நானும் உன்னைப் பார்க்க வேண்டுமென்று நெடுநாட்களாக ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். உன் இருப்பிடம் எனக்கு எதுவென்று தெரியவில்லை. அதனால்தான் நான் உன்னை சந்திக்க வரவில்லை!" என்றது கழுகு.

"கழுகே! எனக்கு ஒரு உதவி தேவை... செய்வாயா?" என்றது அணில்.

"அணிலே! நாம் எத்தனை நாட்களாக பழகி வருகிறோம். நீ என்ன உதவி வேண்டுமானாலும் கேள்! நான் அந்த உதவியை உனக்காக இனிதாக செய்து முடிக்கின்றேன்," என்றது கழுகு.

(தொடரும்)




- 1862 - மினசோட்டாவில் லகோட்டா பழங்குடியினர் நியூ ஊல்ம் குடியேற்றத்திட்டத்தைத் தாக்கி பல வெள்ள்ளையர்களைக் கொன்றனர்.
- 1895 - கொழும்பு தலைமை அஞ்சல் அலுவலகம் திறக்கப்பட்டது.
- 1915 - முதலாம் உலகப் போர்: ஒட்டோமான் பேரரசுப் படைகளுக்கெதிராகஆர்மீனியர்கள் தாக்குதலைத் தொடுத்தனர்.
- 1919 - ஐக்கிய இராச்சியத்தில் இருந்து ஆப்கானிஸ்தான் முழுமையான விடுதலை அடைந்தது.
- 1934 - ஜெர்மனியில் பியூரர் பதவியை ஏற்படுத்த நாட்டின் 89.9மூ மக்கள் ஆதரவாக வாக்களித்தனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜெர்மனியின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நட்பு நாடுகளின் உதவியுடன் பாரிஸ் தாக்குதலைத் தொடுத்தது.
- 1945 - ஹோ ஷி மின் தலைமையில் வியெட் மின் படைகள் வியெட்நாமின் ஹனோய் நகரைக் கைப்பற்றினர்.
- 1946 - கல்கத்தாவில் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலகத்தில் 3000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1953 - பனிப்போர்: அமெரிக்காவின் சிஐஏயின் உதவியுடன் ஈரானின் முகமது மொசாடெக்கின் அரசு கவிழ்க்கப்பட்டு ஷா முகமது ரேசா பாலாவி தலைமையில் அரசு அமைக்கப்பட்டது.
- 1960 - சோவியத்தின் ஸ்புட்னிக் 5 விண்கலம் பெல்கா, ஸ்ட்ரெல்கா என்ற இரு நாய்களையும், 40 சுண்டெலிகளையும், 2 எலிகளையும, பல வகைத் தாவரங்களையும் கொண்டு சென்றது.
- 1980 - சவுதி அரேபியாவில் பயணிகள் விமானம் ஒன்று தரையிறங்குகையில் தீப்பிடித்ததில் 301 பேர் கொல்லப்பட்டனர்.
- 1989 - போலந்தின் பிரதமராக சொலிடாறிற்றி தொழிற்சங்கவாதி டாடியூஸ் மசவியேஸ்கி அதிபர் ஜாருசெல்ஸ்கியினால் தெரிவுசெய்யப்பட்டார். 42 ஆண்டுகளின் பின்னர் தெரிவு செய்யப்படும் முதல் கம்யூனிஸ்ட் அல்லாத பிரதமர் இவரே ஆவார்.
- 1991 - ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி ஒன்றில் சோவியத் அதிபர் மிகைல் கர்பசோவ் கிறிமியா என்ற சுற்றுலா மையத்தில் ஓய்வெடுக்கும் போது கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.
- 2002 - ரஷ்யாவின் ஆடை-26 ரக உலங்கு வானூர்தி செச்சினியத் தீவிரவாதிகளின் ஏவுகணையால் தாக்கப்பட்டதில் 118 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

பிறப்புக்கள்

- 1871 - ஓர்வில் ரைட், எஞ்சின் உந்தும் ஊர்தியில் பறந்து சாதனை படைத்தவர் (இ. 1948)
- 1918 - சங்கர் தயாள் சர்மா, இந்தியாவின் 9 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1999)
- 1929 - ச. அகத்தியலிங்கம், தமிழக மொழியியல் அறிஞர் (இ. 2008)
- 1946 - பில் கிளின்டன், ஐக்கிய அமெரிக்காவின் 42 ஆவது குடியரசுத் தலைவர்

இறப்புகள்

- 1905 - வில்லியம்-அடோல்ஃப் பூகுவேரோ, பிரெஞ்சு ஓவியர் (பி. 1825)
- 1934 - ஃபெடரிக்கோ கார்சியா லோர்க்கா, ஸ்பானிய எழுத்தாளர் (பி. 1898)
- 1962 - இலாய்சி பாஸ்கல், பிரெஞ்சு அறிவியலாளர் (பி. 1623)
- 2014 - அடையார் கே. லட்சுமணன், பரதநாட்டியக் கலைஞர், நடன ஆசிரியர் (பி. 1933)

சிறப்பு நாள்

- உலகப் புகைப்பட நாள்

## உலகப் புகைப்பட நாள்



20 ஆம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட சில புகைப்படங்கள் உலக வரலாற்றை மாற்றி யுள்ளன. உதாரணமாக, சீனவீரர்களின் இரா ணுவ பீரங்கியை எதிர்த்து நின்ற டேங்க்மேன், வியட்நாம் போரை நிறுத்த காரணமாக இருந்த சிறுமியின் புகைப்படம், 1994ம் ஆண்டு, சூடானில் நிலவிய உணவுப் பஞ்சத்தை எடுத்துரை த்த குழந்தையின் போட்டோ ஆகியவற்றை சொல்லலாம்.

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், லூயிசு டாகுவேரே என்பவர், "டாகுரியோடைப்" எனப்படும் புகைப்படத் தின் செயற்பாட்டு முறையை வடிவமைத்தார். 1839ம் ஆண்டு ஜனவரி 9ம் திகதி பிரான்ஸ் அகாடமி ஆப் சயின்ஸ் இம்முறைக்கு ஒப்புதல் அளித் தது. ஆகஸ்ட் 19ம் திகதி , பிரான்ஸ் நாட்டு அரசு "டாகுரியோடைப்" செயற்பாடுகளை "ப்ரீ டு தி வேர்ல்டு" என உலகம் முழுவதும் அறிவித்தது. இதை எடுத்துரைக்கும் வகையில் இன்றைய தினம் உலக புகைப்பட தினமாக கொண்டாடப்படுகிறது.

1826 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஜோசப் நைஸ்போர் நீப்ஸ் என்பவர் முதல் நிலையான நவீன புகைப்படத்தை எடுத்தார். இந்த புகைப்படம் நாளடைவில் அழிந்தது. இதன் பின், 1839ம் ஆண்டு லூயிஸ் டாகுரே பாரிசில் உள்ள போல்வர்டு கோயிலை அருகில் உள்ள தெருவை புகைப்படமாக எடுத்தார். தனிநபர் எடுத்த முதல் புகைப்படம் இது.

சிறந்த புகைப்படங்களுக்கு ஆண்டு தோறும் பல்வேறு அமைப்புகளால் விருதுகள் வழங்கப்படுகின்றன. பத்திரிக்கை துறையில் சிறந்த புகைப்படங்களுக்கு "வேர்ல்டு பிரஸ் போட்டோ" , "டைம்" இதழ் மற்றும் புலிட்சர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 18.08.2015~17.09.2015



**கெட்டி மேளம் கொட்டும் நேரம்! மற்றவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் மேட இராசி நேயர்களே!**

ஆவணிமாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசியை பஞ்சம ஸ்தானத்தில் வீற்றிருக்கும் குரு பார்க்கிறார். தன லாபம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகவே கிடைக்கும். உடன் இருப்பவர்கள் குணத்தோடு நடந்து கொள்வர். கொடிகட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாக மாறும். கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும். வீட்டில் கெட்டிமேளம் கொட்டும் வாய்ப்பு நெருங்கி வருவதற்கான அறிகுறிகள் தென்படும் விதத்தில், கிரகங்களின் நிலைகள் விளங்குகின்றது.

ஐந்தாமிடத்தில் நான்கு கிரகங்கள் முற்றுகையிட்டு இருக்கின்றன. இந்த கூட்டு கிரக யோகம் தான் உங்களுக்கு கூடுதலான நன்மையைத் தரப்போகின்றது. குறிப்பாக சேர்க்கை பெற வேண்டிய கிரகங்கள் சேர்க்கை பெற்றிருக்க வேண்டும். விலகியிருக்க வேண்டிய கிரகங்கள் விலகியிருக்க வேண்டும். இதன்படி சாதகமான கிரகங்கள் ஒன்றாக இணைந்து சஞ்சரிப்பதால் ஜாதகப் பலன் நமக்கு நல்ல விதமாக அமையும்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது புதன், சுக்ரன், சூரியன், வியாழன் ஆகிய நான்கு கிரகங்களும் பஞ்சம ஸ்தானத்தில் இணைந்திருப்பதால் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறப் போகின்றது. நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். நிகழ் காலத் தேவைகள் பூர்த்தியாகும். புத ஆதித்ய யோகமும், புத சுக்ர யோகமும் செயறபடும் இந்த நேரத்தில், அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு நல்ல பொறுப்புகள் வந்து சேரும்.

ஆறாமிடத்து ராகு சந்திரனோடு இணைந்திருப்பதால் தனக்குத்த்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பார்க்கும் குருவைப் பலப்படுத்த வியாழக் கிழமை தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சனி பகவானால் ஏற்படும் சஞ்சலம் தீர சனி பகவானை சனிக்கிழமையன்று வழிபட்டு வாருங்கள்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 21 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். மீண்டும் செப்டம்பர் 15 ஆம் திகதி சிம்மத்திற்கு வக்ரமாகச் செல்கின்றார். 3, 6-க்கு அதிபதி வக்ரம் பெறுவது யோகம்தான். என்றாலும் பஞ்சாயத்துக்கள் முடிவடைவதில் தாமதம் ஏற்படலாம். பிள்ளைகள் வழியிலும் பிரச்சினைகள் வந்து சேரலாம். செலவு கூடும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 24 ஆம் திகதி சுக்ரன் வக்ர இயக்கத்தில் கடக ராசிக்கு செல்கிறார். 2-க்கு அதிபதி 4 இல் சஞ்சரிப்பது யோகம்தான். கொடுத்த




சனியின் ஆதிக்கம் மீண்டும் தொடங்குகிறது. அந்தச் சனி செவ்வாயைப் பார்க்கும் அமைப்பு உருவாகின்றது.

எனவே வீடு வாங்க, விற்க எடுத்த முயற்சி வெற்றி தரும். வேலையில் கூடுதல் பளு உருவாகும். குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். சுப விரயம் உண்டு. இம்மாதம் சனி வழிபாடு சந்தோஷம் வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

வளர்ச்சி கூடும் மாதமிது. வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டும். வருமானம் திருப்தி தரும். மாதத்தின் பிற்பாதியில் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் தொடர்வதால்,

## கெட்டி மேளம் கொட்டும் நேரம்!

தானே எதிரி என்ற விதத்தில் உறவினர்களின் பகையை ஒரு சிலர் தேடிக்கொள்ள நேரிடலாம். பகை மாறி பாசம் அதிகரிக்க வேண்டுமானால், எதிலும் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. சப்தம சனியின் ஆதிக்கம் மீண்டும் அஷ்டமத்துச் சனியாக மாதத்தின் மையப் பகுதியில் மாறப்போகின்றது. அதன்பிறகு விரயங்கள் கூடுதலாக இருந்தாலும் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. சுபவிரயங்கள் அதிகரிக்கும். குடும்ப

கன்னி ராசியில் வக்ரம் பெறும் பொழுது உத்தியோக முன்னேற்றம், ஊதிய உயர்வு போன்றவைகள் கிடைக்கும். கடன் சுமை குறைய புதிய வழிபிறக்கும். உறவினர் பகை அகலும். தொழிலில் மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்போடு லாபம் காண்பீர்கள். அதே நேரத்தில் சிம்மத்தில் புதன் வக்ரமாகும் பொழுது, பாகப்பிரிவினைகளில் ஏற்பட்ட

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். எதிரிகளை இனம் கண்டு கொள்வீர்கள். கூட்டுத் தொழிலில் மாற்றம் ஏற்படலாம்.

**விருச்சிக சனியும், சிம்ம செவ்வாயும்!**

செப்டம்பர் 5 ஆம் திகதி விருச்சிகத்தில் சனி சஞ்சரிக்கப் போகிறார். செப்டம்பர் 17 ஆம் திகதி சிம்மத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக அஷ்டமத்துச்

எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தபடியே ஊதிய உயர்வு கிடைக்கும்.



**மனக்கலக்கம் அகன்று மகிழ்ச்சி கூடும் நேரம்! எப்படிப்பட்டவராக இருந்தாலும் இனிமையான பேச்சுக்களால் அவர்களை தன்வசம் ஈர்க்கும் இடப இராசி நேயர்களே!**

ஆவணிமாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் சுக்ரன் தானாதிபதியோடும், சுகாதிபதியோடும் இணைந்து சுக ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் எல்லாவிதமான வசதி வாய்ப்புகளும் வந்து சேரும். எடுத்து, எடுத்துச் செலவழித்தாலும் பஞ்சம் ஏற்படாது. ஆரோக்கியப் பாதிப்பில் இருந்து விடுபட்டு அதிக உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். வீடு வாங்கும் முயற்சி அல்லது வீடு கட்டும் முயற்சியில் இருந்து வந்த தடை இப்பொழுது அகலும்.

விரயாதிபதி நீச்சம் பெற்றிருப்பது ஒரு வழிக்கு நன்மைதான். அதே நேரத்தில் சப்தமாதிபதியாகவும், செவ்வாய் விளங்குவதால் வாழ்க்கைத் துணை வழியே விரயங்கள் ஏற்படலாம். நீண்ட தூரப் பயணங்களால் ஒரு சிலருக்கு நிகழ் காலத் தேவைகள் பூர்த்தியாகும். இடமாற்றம், ஊர் மாற்றம், இலாகா மாற்றம் போன்றவைகள் திசாபுத்தி பலமிழந்தவர்களுக்கு ஏற்படலாம்.

வாங்கிய சொத்துக்களை ஒரு சிலர் விற்க நேரிடலாம். ஆனால் அதற்காக கவலைப்பட வேண்டாம். ஆதாயத்துடன் விற்க நேரிடும். அதே நேரத்தில் பாகப்பிரிவினைகள் மூலம் வரும் பூர்வீக சொத்துக்களை வைத்துக்கொள்வதா, வேண்டாமா? என்று சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைப்பளு கூடும். 6 இல் சஞ்சரிக்கும் சனி உச்சம் பெற்றிருப்பது ஒரு வழிக்கு நன்மைதான். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்

இருந்த தடை அகலவும் வியாழக் கிழமை தோறும் தட்சிணாமூர்த்தியை வழிபாடு செய்யுங்கள். மேதா தட்சிணாமூர்த்தி இருக்கும் ஆலயத்திற்கு சென்று வழிபட்டால் சாதாரண மனிதர் கூட சக்கரவர்த்தியாகும் வாய்ப்பு உண்டு.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்டு 21 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் வக்ரம் பெறப்போகின்றார். அதன் பிறகு செப்டம்பர் 15 ஆம் திகதி சிம்மத்தில் வக்ரம் பெறப் போகின்றார். எதில் வக்ரம் பெற்றாலும் அது அவ்வளவு நல்லதல்ல. தன பஞ்சமாதிபதியாக புதன் விளங்குவதால் பணப்பற்றாக்குறை ஏற்படாது. அப்போதைக்கப்போது செலவிற்கேற்ற தொகை வந்து சேரும். காரியத்தை தொடங்கி விட்டால் காசு, பணம் தானே

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 24 ஆம் திகதி கடகத்தில் சுக்ரன் வக்ரம் பெறுகிறார். 6-க்கு அதிபதியாக விளங்கும் சுக்ரன் 3 இல் வக்ரம் பெறும்பொழுது எதிர்பாராத விதத்தில் நல்ல பலன்கள் நடைபெறப்போகின்றது. நீண்டநாள் ஆசை நிறைவேறும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். சகோதரர்களால் சகாயம் உண்டு. மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

**விருச்சிக சனியும், சிம்ம செவ்வாயும்!**




உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. செவ்வாய் பலத்தால் பூமி யோகம் உண்டாகும். பொது நலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் கிடைக்கும். விலகிச் சென்ற சகோதரர் விரும்பி வந்திணைவர். இம்மாதம் ஆதியந்தப் பிரபு வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் தாய்வழி ஆதரவு கிடைக்கும். தக்க விதத்தில் பொருளாதார நிலை உயரும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. உதாசீனப் படுத்திய உறவினர்கள் உங்களைத் தேடி வந்து உதவி கேட்பர். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் அகன்று பாசமும், நேசமும் கூடும்.

குழந்தைகள் உங்கள் எண்ணங்களைப் பூர்த்தி செய்வர். சனி

## மனக்கலக்கம் நீங்கி மகிழ்ச்சி கூடும்

களுக்கு திடீரென நல்ல பொறுப்புகள் வந்து சேரும்.

என்ன இருந்தாலும் அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் இருப்பதால் இடம், பூமியால் ஏமாற்றங்களைச் சந்திக்காமல் இருக்கவும், இல்லத்தில் நல்ல சம்பவம் நடைபெறுவதில்

வந்து சேரும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்கிப் பார்ப்பீர்கள். தொழில் தொடங்கும் முயற்சியிலும் ஆர்வம் காட்டுவீர்கள். ஒரு சிலருக்கு பிள்ளைகளால் பிரச்சினைகளும், விரயங்களும் ஏற்படலாம்.

செப்டம்பர் 5 ஆம் திகதி விருச்சிகத்தில் சனி சஞ்சரிக்கப் போகின்றார். செப்டம்பர் 17 இல் சிம்மத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகின்றார். கண்டகச் சனியின் ஆதிக்கத்தால் உடல்நலனுக்கென்று ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உண்டாகும்.

வழிபாடு சந்தோஷம் வழங்கும். சென்ற மாதத்தில் பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். உத்தியோகத்தில் உள்ள பெண்களுக்கு ஊர் மாற்றம் நல்ல மாற்றமாக அமையும். நீண்ட தூரப் பயணங்கள் சிலருக்கு ஏற்படலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் தொகுதி ரீதியான முடிபுகள்

## வட்டுக்கோட்டை

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் |
|---|---|---|
| த.தே.கூ. | 17,237 | 65.16 |
| ஈ.பி.டி.பி. | 2,843 | 10.75 |
| ஐ.தே.க. | 2,678 | 10.12 |
| அ.இ.த.கா. | 1,320 | 4.99 |
| ஐ.ம.சு.கூ. | 1,311 | 4.96 |
| செல்லுபடியானவை | 26,453 | 90.80% |
| நிராகரிக்கப்பட்டவை | 2,679 | 9.20% |
| வாக்களிக்கப்பட்டவை | 29,132 | 61.17% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 47,621 | |

## கிளிநொச்சி

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் |
|---|---|---|
| த.தே.கூ. | 38,153 | 74.44 |
| ஈ.பி.டி.பி. | 6,417 | 13.02 |
| ஐ.தே.க. | 1,646 | 3.34 |
| ஐ.ம.சு.கூ. | 1,285 | 2.61 |
| அ.இ.த.கா. | 532 | 1.08 |
| செல்லுபடியானவை | 49,268 | 91.31% |
| நிராகரிக்கப்பட்டவை | 4,689 | 8.69% |
| வாக்களிக்கப்பட்டவை | 53,957 | 68.22% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 79,093 | |

## யாழ்ப்பாணம்

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் |
|---|---|---|
| த.தே.கூ. | 13,545 | 67.32 |
| ஈ.பி.டி.பி. | 2,203 | 10.95 |
| ஐ.தே.க. | 1,414 | 7.03 |
| அ.இ.த.கா. | 1,132 | 5.63 |
| ஐ.ம.சு.கூ. | 1,110 | 5.52 |
| செல்லுபடியானவை | 20,119 | 94.01% |
| நிராகரிக்கப்பட்டவை | 1,283 | 5.99% |
| வாக்களிக்கப்பட்டவை | 21,402 | 64.76% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 33,050 | |

## ஊர்காவற்றுறை

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் |
|---|---|---|
| த.தே.கூ. | 7,688 | 58.56 |
| ஈ.பி.டி.பி. | 3,924 | 29.89 |
| ஐ.தே.க. | 424 | 3.23 |
| அ.இ.த.கா. | 329 | 2.51 |
| ஐ.ம.சு.கூ. | 421 | 3.21 |
| செல்லுபடியானவை | 13,129 | 90.43% |
| நிராகரிக்கப்பட்டவை | 1,389 | 9.57% |
| வாக்களிக்கப்பட்டவை | -- | -- |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | -- | -- |

## நல்லூர்

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் |
|---|---|---|
| த.தே.கூ. | 18,793 | 69.21 |
| ஈ.பி.டி.பி. | 2,005 | 7.38 |
| ஐ.தே.க. | 1,662 | 6.12 |
| அ.இ.த.கா. | 2,420 | 8.91 |
| ஐ.ம.சு.கூ. | 1,444 | 5.32 |
| செல்லுபடியானவை | 27,152 | 94.09% |
| நிராகரிக்கப்பட்டவை | 1,707 | 5.91% |
| வாக்களிக்கப்பட்டவை | 28,859 | 61.80% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 46,699 | |

## சாவகச்சேரி

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் |
|---|---|---|
| த.தே.கூ. | 20,188 | 76.48 |
| ஈ.பி.டி.பி. | 1,469 | 5.57 |
| ஐ.தே.க. | 1,682 | 6.37 |
| அ.இ.த.கா. | 766 | 2.90 |
| ஐ.ம.சு.கூ. | 1,591 | 6.03 |
| செல்லுபடியானவை | 26,395 | 91.39% |
| நிராகரிக்கப்பட்டவை | 2,486 | 8.61% |
| வாக்களிக்கப்பட்டவை | 28,881 | 55.86% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 51,702 | |

## பருத்தித்துறை

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் |
|---|---|---|
| த.தே.கூ. | 12,678 | 65.69 |
| ஈ.பி.டி.பி. | 1,920 | 9.95 |
| ஐ.தே.க. | 1,187 | 6.15 |
| அ.இ.த.கா. | 1,858 | 9.63 |
| ஐ.ம.சு.கூ. | 1,050 | 5.44 |
| செல்லுபடியானவை | 19,301 | 92.21% |
| நிராகரிக்கப்பட்டவை | 1,631 | 7.79% |
| வாக்களிக்கப்பட்டவை | 20,932 | 57.92% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 36,138 | |

## உடுப்பிட்டி

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் |
|---|---|---|
| த.தே.கூ. | 12,650 | 65.53 |
| ஈ.பி.டி.பி. | 1,037 | 5.37 |
| ஐ.தே.க. | 925 | 4.79 |
| அ.இ.த.கா. | 1,606 | 8.32 |
| ஐ.ம.சு.கூ. | 2,192 | 11.36 |
| செல்லுபடியானவை | 19,303 | 91.32% |
| நிராகரிக்கப்பட்டவை | 1,835 | 8.68% |
| வாக்களிக்கப்பட்டவை | 21,138 | 53.92% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 39,204 | |

## கோப்பாய்

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் |
|---|---|---|
| த.தே.கூ. | 20,925 | 69.08 |
| ஈ.பி.டி.பி. | 2,588 | 8.54 |
| ஐ.தே.க. | 1,983 | 6.55 |
| அ.இ.த.கா. | 1,130 | 3.73 |
| ஐ.ம.சு.கூ. | 2,699 | 8.91 |
| செல்லுபடியானவை | 30,289 | 91.16% |
| நிராகரிக்கப்பட்டவை | 2,938 | 8.84% |
| வாக்களிக்கப்பட்டவை | 33,227 | 59.45% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 55,891 | |

## மானிப்பாய்

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் |
|---|---|---|
| த.தே.கூ. | 20,875 | 67.64 |
| ஈ.பி.டி.பி. | 2,129 | 6.90 |
| ஐ.தே.க. | 2,888 | 9.36 |
| அ.இ.த.கா. | 1,498 | 4.85 |
| ஐ.ம.சு.கூ. | 1,959 | 6.35 |
| செல்லுபடியானவை | 30,862 | 92.17% |
| நிராகரிக்கப்பட்டவை | 2,623 | 7.83% |
| வாக்களிக்கப்பட்டவை | 33,485 | 61.36% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 54,567 | |

## காங்கேசன்துறை

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் |
|---|---|---|
| த.தே.கூ. | 14,756 | 64.61 |
| ஈ.பி.டி.பி. | 2,464 | 10.79 |
| ஐ.தே.க. | 2,064 | 9.04 |
| அ.இ.த.கா. | 1,033 | 4.52 |
| ஐ.ம.சு.கூ. | 1,656 | 7.25 |
| செல்லுபடியானவை | 22,840 | 92.08% |
| நிராகரிக்கப்பட்டவை | 1,964 | 7.92% |
| வாக்களிக்கப்பட்டவை | 24,804 | 39.24% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 63,217 | |

# 14 வருடங்களின் பின் சுயாதீனமான தேர்தல்

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்



(கொழும்பு)

2001ஆம்ஆண்டின் பின்னர் நாட்டில் நடைபெற்ற மிகவும் சுயாதீனமான தேர்தல் இம்முறை நடைபெற்றுள்ளதாக தேர்தல்களுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

மிகவும் அமைதியான முறையிலும் சுயாதீனமான முறையிலும் இம்முறை தேர்தல் நடைபெற்றது.

நான் ஏழு பொலிஸ்மா அதிபர்களின் கீழ் கடமையாற்றியுள்ளேன்.

ஏழாவது பொலிஸ்மா அதிபர் தற்போதைய பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோனாகும்.

எனது பதவிக் காலத்தில் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோனின் தலைமையிலேயே மிகவும் நீதியான முறையில் தேர்தல் நடைபெற்றுள்ளது.

இந்த தேர்தல் ஒட்டு மொத்த உலகிற்கும் முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

தேர்தலை அமைதியாக நடத்தியமைக்காக வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் எமக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர் என அவர் தெரிவித்துள்ளார்.

# முறைப்பாடுகள் எவையும் பாரிய அளவில் இல்லை

## தேர்தல்கள் ஆணையாளர் தகவல்

கடந்த தேர்தலிலும் பார்க்க இம்முறை மிகக் குறைந்த முறைப்பாடுகளே கிடைக்கப் பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

நேற்று வாக்கெடுப்பு நடைபெற்றதன் பின்னர் தேர்தல்கள் ஆணையாளர் இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்தில் ஊடகவியலாளர்களிடம் விளக்கமளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் அதிகளவான சிறிய முறைப்பாடுகள் கடைசி ஒன்றரை மணித்தியாலங்களில் கிடைக்கப்பெற்றதாக அவர் தெரிவித்தார். இதில் எங்களுக்கு வாக்களிக்க முடியவில்லை என்றே அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்ததாக அவர் தெரிவித்தார்.

இணையத்தளங்கள் மூலம் வெளியான போலி விளம்பரங்கள் தொடர்பாக தமக்கு முறைப்பாடு கிடைத்திருப்பதாக தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், 2013 இல் புத்தளத்தில் கணக்கிடப்பட்ட வாக்குச் சீட்டுகள் கண்டெடுக்கப்பட்ட போது வெளியான புகைப்படத்தை பயன்படுத்தி, அது இம்முறை கொழும்பில் கிடைக்கப்பெற்ற வாக்குச்சீட்டுகள் என போலியான விளம்பரம் ஒன்றை இணையத்தளத்தில் வெளியிட்டு மக்களை குழப்ப முயற்சித்தமை தொடர்பாகவும் அவர் இதன்போது தெளிவுபடுத்தினார்.

தேர்தல் முடிவை மிகவும் அமைதியாகக் கொண்டாடுமாறும், அதுபோன்று தேர்தலில் ஏற்படும் தோல்வி குறித்தும் முறையாக செயற்படுமாறும் அவர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

சர்வதேச கண்காணிப்பாளர்களிடமிருந்து பாரியளவிலான முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற பொதுத் தேர்தல் மாவட்ட ரீதியான முடிவுகள்

### மொனராகலை

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 138,136 | 52.53 | 3 |
| ஐ.தே.க. | 110,372 | 41.97 | 2 |
| ம.வி.மு. | 13,626 | 5.18 | 0 |
| செல்லுபடியானவை | 262,988 | 96.59% | |
| நிராகரிக்கப்பட்டவை | 9291 | 3.41% | |

### திருகோணமலை

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.க. | 83,638 | 46.36 | 2 |
| த.தே.கூ. | 45,894 | 25.44 | 1 |
| ஐ.ம.சு.கூ. | 38,463 | 21.32 | 1 |
| செல்லுபடியானவை | 180,396 | 94.48% | |
| நிராகரிக்கப்பட்டவை | 10,542 | 5.52% | |

### அநுராதபுரம்

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 229,856 | 48.35 | 5 |
| ஐ.தே.க. | 213,072 | 44.82 | 4 |
| ம.வி.மு. | 28,701 | 6.04 | 0 |
| செல்லுபடியானவை | 475,383 | 94.35% | |
| நிராகரிக்கப்பட்டவை | 28,462 | 5.65% | |

### பொலநறுவை

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.க. | 118,845 | 50.26 | 3 |
| ஐ.ம.சு.கூ. | 103,172 | 43.63 | 2 |
| ம.வி.மு. | 13,497 | 5.71 | 0 |
| செல்லுபடியானவை | 236,462 | 96.47% | |
| நிராகரிக்கப்பட்டவை | 8,654 | 3.53% | |

### அம்பாந்தோட்டை

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 196,980 | 53.84 | 4 |
| ஐ.தே.க. | 130,433 | 35.65 | 2 |
| ம.வி.மு. | 36,527 | 9.98 | 1 |
| செல்லுபடியானவை | 365,829 | 97.32% | |
| நிராகரிக்கப்பட்டவை | 10,056 | 2.68% | |

### மாத்தறை

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 250,505 | 52.44 | 5 |
| ஐ.தே.க. | 186,675 | 39.08 | 3 |
| ம.வி.மு. | 35,270 | 7.38 | 0 |
| செல்லுபடியானவை | 477,717 | 97.41% | |
| நிராகரிக்கப்பட்டவை | 12,692 | 2.59% | |

### காலி

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 312,518 | 50.07 | 6 |
| ஐ.தே.க. | 265,180 | 42.48 | 4 |
| ம.வி.மு. | 37,778 | 6.05 | 0 |
| செல்லுபடியானவை | 62,4211 | 97.64% | |
| நிராகரிக்கப்பட்டவை | 15,107 | 2.36% | |

### நுவரெலியா

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.க. | 228,920 | 59.01 | 5 |
| ஐ.ம.சு.கூ. | 147,348 | 37.98 | 3 |
| ம.வி.மு. | 5,590 | 1.44 | 0 |
| செல்லுபடியானவை | 387,946 | 92.21% | |
| நிராகரிக்கப்பட்டவை | 32,788 | 7.79% | |

### இரத்தினபுரி

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 323,636 | 51.19 | 6 |
| ஐ.தே.க. | 28,4117 | 44.94 | 5 |
| ம.வி.மு. | 21,525 | 3.40 | 0 |
| செல்லுபடியானவை | 632,196 | 96.49% | |
| நிராகரிக்கப்பட்டவை | 23,026 | 3.51% | |

### மாத்தளை

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.க. | 138,241 | 49.84 | 3 |
| ஐ.ம.சு.கூ. | 126,315 | 45.54 | 2 |
| ம.வி.மு. | 10,947 | 3.95 | 0 |
| செல்லுபடியானவை | 277,380 | 92.79% | |
| நிராகரிக்கப்பட்டவை | 21,537 | 7.21% | |

### பதுளை

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.க. | 258,844 | 54.76% | 5 |
| ஐ.ம.சு.கூ. | 179,459 | 37.97% | 3 |
| ம.வி.மு. | 21,445 | 4.54% | 0 |
| செல்லுபடியானவை | 472,682 | 95.14% | |
| நிராகரிக்கப்பட்டவை | 24,167 | 4.86% | |

### குருநாகல்

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 474,124 | 49.26% | 8 |
| ஐ.தே.க | 441,275 | 45.85% | 7 |
| ம.வி.மு. | 41,077 | 4.27% | 0 |
| செல்லுபடியானவை | 962,423 | 95.44% | |
| நிராகரிக்கப்பட்டவை | 46,036 | 4.56% | |

### வன்னி

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| த.தே.கூ. | 89,886 | 54.55 | 4 |
| ஐ.தே.க. | 39,513 | 23.98 | 1 |
| ஐ.ம.சு.கூ. | 20,965 | 12.72 | 1 |
| செல்லுபடியானவை | 164,775 | 90.57% | |
| நிராகரிக்கப்பட்டவை | 17,155 | 9.43% | |

### கேகாலை

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.க. | 247,467 | 49.52 | 5 |
| ஐ.ம.சு.கூ. | 227,208 | 45.47 | 4 |
| ம.வி.மு. | 18,184 | 3.64 | 0 |
| செல்லுபடியானவை | 499,694 | 96.34% | |
| நிராகரிக்கப்பட்டவை | 18,980 | 3.66% | |

### திகாமடுல்ல

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.க. | 151,013 | 46.30 | 4 |
| ஐ.ம.சு.கூ. | 89,334 | 27.39 | 2 |
| ம.வி.மு. | 45,421 | 13.92 | 1 |
| செல்லுபடியானவை | 326,195 | 94.65% | |
| நிராகரிக்கப்பட்டவை | 18,423 | 5.35% | |

### கண்டி

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.க. | 440761 | 55.57 | 7 |
| ஐ.ம.சு.கூ. | 309152 | 38.98 | 5 |
| ம.வி.மு. | 30669 | 3.87 | 0 |
| செல்லுபடியானவை | 793100 | 95.54% | |
| நிராகரிக்கப்பட்டவை | 37065 | 4.46% | |

### புத்தளம்

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.க. | 180,185 | 50.40 | 5 |
| ஐ.ம.சு.கூ. | 153,130 | 42.83 | 3 |
| ம.வி.மு. | 12,211 | 3.42 | 0 |
| செல்லுபடியானவை | 357,508 | 93.92% | |
| நிராகரிக்கப்பட்டவை | 23,124 | 6.08% | |

### களுத்துறை

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 338,801 | 48.56 | 5 |
| ஐ.தே.க. | 310,234 | 44.47 | 4 |
| ம.வி.மு. | 38,475 | 5.52 | 1 |
| செல்லுபடியானவை | 697,635 | 97.03% | |
| நிராகரிக்கப்பட்டவை | 21,366 | 2.97 | |

### கொழும்பு

| கட்சிகள் | வாக்குகள் | விகிதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.க. | 640743 | 53.00 | 11 |
| ஐ.ம.சு.கூ. | 474063 | 39.21 | 7 |
| ம.வி.மு. | 81391 | 6.73 | 1 |
| செல்லுபடியானவை | 1208899 | 96.54% | |
| நிராகரிக்கப்பட்டவை | 43372 | 3.46% | |

## நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுகிறது

பொதுத்தேர்தல் முடிவடைந்து பெறுபேறுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் நாடு முழுவதும் அமைதியான சூழ்நிலை காணப்படுகிறது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர அரசாங்க உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு தெரிவித்தார்.

வெற்றி பெறும் குழு தோல்வியடைந்த குழுக்களுக்கு எந்தவிதத்திலும் உடல் உள ரீதியாக பிரச்சினைகளை ஏற்படுத்தாமல் அமைதியான முறையில் வெற்றியை கொண்டாடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கோத்தவுக்கு அழைப்பாணை

பல்வேறு காரணங்களைக் காட்டி ஆஜராவதைத் தவிர்த்து வந்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை விசேட ஜனாதிபதி விசாரணைக் குழு முன் இன்று ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கான அழைப்பாணையை நேற்றைய தினம் அவரது இல்லத்திற்குச் சென்றுள்ள மிரிஹான பொலிஸ் அதிகாரிகள் வாசல் கேற்றில் ஒட்டிவிட்டு சென்றுள்ளனர். எழுத்து மூலமான மேற்படி அழைப்பாணையை மிரிஹான பொலிஸார் கோத்தபாய ராஜபக்ஷவின் இல்லத்திற்கு எடுத்துச் சென்ற போது அங்கு பாதுகாப்புக் கடமையிலிருந்த இராணுவ வீரர் சுனில் பிரியந்த சுமணதாச அதனை ஏற்கமறுத்துள்ளார்.

எதனையும் பொறுப்பேற்கக் கூடாது என கோத்தபாய ராஜபக்ஷ தமக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். பொலிஸார் அவரிடம் வாக்கு மூலத்தை பதிவுசெய்து கொண்டுள்ளனர். அதனையடுத்து பொலிஸார் மேற்படி அழைப்பாணையை வாசலிலுள்ள கேற்றில் ஒட்டி விட்டுத் திரும்பியுள்ளனர். இதனை மிரிஹான பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி ஜயலத்திற்கு மேற்படி குழு தெரிவித்துள்ளது.

அவ்வறிவித்தலுக்கிணங்க கோத்தபாய ராஜபக்ஷ இன்றைய தினம் மேற்படி விசாரணைக் குழு முன்னிலையில் ஆஜராகாவிட்டால் அவருக்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தொடர்பில் மேற்படி விசாரணைக்குழு இன்று வெளியிடும். கோத்தபாய ராஜபக்ஷவை மேற்படி விசாரணைக் குழு கடந்த 14 ஆம் திகதி அழைத்திருந்தபோதும் அவர் தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதால் பிறிதொரு தினத்தைக் கோரி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் ஏற்கனவே கேட்டுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இச் செய்தி அச்சுக்கு போகும் வரையும் கோத்த விசாரணைக குழு முன் ஆஜரான விடயம் தெரியவரவில்லை.

## தேசியப்பட்டியல் பெயர்கள் மாற்றம் செய்யப்படமாட்டாது

### தேர்தல்கள் ஆணையாளர் தகவல்

தேசியப் பட்டியல் பெயர் விபரங்களில் மாற்றம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது என தேர்தல்கள் ஆணையாளர மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்த ஆவணம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்தப் பட்டியலை இனி எவராலும் மாற்றி அமைக்க முடியாது.

தேசியப் பட்டியல் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ள வேட்பாளர்கள் கட்சிகளில் தோலவி அடையும் வேட்பாளர்கள் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட முடியும்.

அரசியல் அமைப்பின் 14 ஆம் திருத்தச்சட்டத்தின் 99(அ) சரத்தின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிடாத எவரும் தேசியப்பட்டியலில் உள்ளடக்கப்பட முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## சுனில் ஹந்துன்நெத்தி தோல்வியடைந்தார்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட சுனில் ஹந்துன்நெத்தி தோல்வியைத் தழுவியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி. கட்சியின் அரசியல் சபை உறுப்பினர்களில் ஒருவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி இவ்வாறு தோல்வியடைந்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் ஜே.வி.பியின் மாவட்டத் தலைவராக சுனில் ஹந்துன்நெத்தி போட்டியிட்டிருந்தார்.

மாத்தறை மாவட்டத்தில் ஜே.வி.பி. கட்சி மொத்தமாக 35 ஆயிரத்து 270 வாக்குகளைப் பெற்றுக் கொண்டது.

மாத்தறையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஐந்து ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி மூன்று ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வசந்த சேனநாயக்க வைத்தியசாலையில்

பொலநறுவை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வசந்த சேனநாயக்க திடீர் சுகவீனமடைந்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கும் நிலையில் அவர் இவ்வாறு திடீர் சுகவீனமடைந்துள்ளார். திடீரென வசந்த சேனநாயக்கவிற்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கபபடுகிறது.

பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட உள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பொலநறுவைமாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மகிந்தவின் சகோதரி தோல்வி

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் அம்பாந்தோட்டையில் போட்டியிட்ட நிருபமா ராஜபக்ஷ தோல்வியடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலுக்கு அமைய சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, மகிந்த அமரவீர, டி.எச் சானக்க ஆகியோர் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

எனினும் சகோதரியான நிருபமா ராஜபக்ஷ தோல்வியடைந்துள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு மாற்றமும் நிகழப்போவதில்லை!

நிஜத்தில் இந்த தேர்தல் முன்னைய தேர்தல்போலவே ஒன்றுதான். எந்தவொரு மாற்றமும் இதன்மூலம் நிகழ்ந்துவிடப் போவதில்லை என்பதுதான் கடந்த காலங்களின் பாடங்கள் தரும் மிகப்பெரும் வரலாற்று படிப்பினை.

தமிழ்மக்கள் மீதான அனைத்து அடக்குமுறைகளையும் சட்டரீதியாக தயாரித்த ஒரு நிறுவனமாகவே இலங்கை பாராளுமன்றம் விளங்குகின்றது. தமிழ் மக்கள் மீதான கொடூரமான இனஅழிப்புகளையும், இனச்சுத்திகரிப்புகளையும், நில அபகரிப்புகளையும் நியாயப்படுத்தும் சட்டமூலங்களின் பிறப்பிடமாகவே இற்றைவரை இலங்கை பாராளுமன்றம் இயங்கி வருகின்றது. இனியும் அதன் போக்கில் எந்தவொரு மாற்றமும் நிகழ்ந்துவிடப் போவதில்லை என்பதுதான் சத்தியமான உண்மை.

இன்றைய உலகில் ஜனநாயக ஆட்சி முறையே அதி உன்னதமான ஒன்றாக உருவகிக்கப்படுகின்றது. உண்மையும் அதுதான். இதற்கு மாற்றாக இதனைவிட சிறப்பான ஒன்று உருவாகும் வரை இதுவே நீடிக்கும் என்பதிலும் சந்தேகமேயில்லை.

உலகம் ஏற்றுக்கொண்டுள்ள ஆட்சி முறையாக அதுவே விளங்கியும் வருகின்றது. இங்குதான் சிங்களத்தின் நரித்தனமும், சமயோசிதமும் வெளிப்படுகின்றது. உலகம் ஏற்றுக்கொண்ட ஒரு ஆட்சி முறை ஒன்றின் ஊடாக நடத்தப்படும் ஆட்சி இது என்ற தோற்றத்தை உருவாக்கிக் கொண்டு மறுபுறத்தே அதே ஆட்சியின் சட்டங்கள், மற்றும் அரச இயந்திரங்கள் அனைத்தின் மூலமும் தமிழ் மக்கள்மீது உலகத்தின் சட்டங்களுக்கு முரணான ஒரு இன அழிப்பு அடக்கு முறை ஆட்சியை கடந்த அறுபது வருடங்களாக நடத்தி வருகின்றது. இனியும் அதுவே எந்தவொரு மாற்றமும் இல்லாமல் தொடரும். அதிசயம் ஏதேனும் நிகழ்வதற்கான வால் நட்சத்திரம் எதுவுமே வானத்தில் இல்லை. சிங்கள மனங்களிலும்கூட.

இந்த பாராளுமன்றத்துக்கான தேர்தலே இப்போது நடக்கின்றது. ஆனால் இந்த பாராளுமன்ற தேர்தல் முடிவுகளின் பின்னர் சிறகுவிரித்தெழுந்து பறந்திடும் விடுதலை வாழ்வும், இராணுவ சந்தடியற்ற தமிழர்கள் தெருக்களும் வந்துவிடும் என்பதைப் போன்ற பசப்புகளே எமது மக்களின் மனங்களில் விதைக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னர் ஏறத்தாள 1977 வரை இத்தகையை ஒரு மாயையே தமிழர் தேர்தல் மேடைகளில் இரண்டு கட்சிகளாலும் ஏற்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இளைஞர்களின் கரங்களுக்கு வந்து அர்ப்பணிப்பும், உலக அரசியலின் மாற்றங்களை உள்வாங்கிய ஒரு தெளிவும் ஏற்பட்டபோது இலங்கை



பாராளுமன்றத்துக்கான தேர்தல் தமிழர்களின் வாழ்வினுள் எந்தவொரு சலசலப்பையும் ஏற்படுத்தாத ஒன்றாகவே வந்து போனது தெரிந்ததே. ஆனாலும் இந்த தேர்தலை எமது விடுதலைக்கான குரலை ஓங்கி வெளிப்படுத்தும் ஒரு களமாகவும், இந்த பாராளுமன்றத்தை உலக நடைமுறையுடன் ஒன்றித்து எமது விடுதலையை வெளிப்படுத்தும் முறைமையாகவும் வரலாற்றின் போக்கு மாற்றியது. 1977ல் இலங்கைப் பாராளுமன்றத்துக்கான தேர்தலை தமிழீழத்துக்கான ஒரு வாக்கு எண்ணிக்கையாகவே இளைஞர்களின் அமைப்புகள் பார்த்தன. ஏறத்தாள அனைத்து அமைப்புகளும் அந்த தேர்தலில் இறங்கி வேலையும் செய்தன என்றே சொல்லலாம்.

அதன் பின்னர் 82 ஒகஸ்ட் 1 ஆம்திகதி அப்போதைய வட்டுக்கோட்டை பா.உ திருநாவுக்கரசு மரணமடைந்தபோது இலங்கை பாராளுமன்றத்தினை இன்னொரு முறையில் பயன்படுத்தும் ஒரு முறைமை உருவாகியது. வட்டுக்கோட்டை பா.உ திருநாவுக்கரசின் இடத்துக்கு இளைஞர்களின் அழுத்தம் காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணி, அப்போது வெலிக்கடை சிறையில் மரணதண்டனையை (1982 ஒகஸ்ட மாதம் குட்டிமணி, ஜெகனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது) எதிர்நோக்கி இருந்த குட்டிமணியை பா.உ வாக நியமித்தனர். இந்த வரலாறு நிகழ்வதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னர் தான் ஜரிஸ் விடுதலை அமைப்பை சேர்ந்த பொபி சாண்டஸ் பிரித்தானிய பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று அயர்லாந்து விடுதலைக்கு ஒரு சர்வதேச அங்கீகாரத்தை ஏற்படுத்தி இருந்தமை குட்டிமணியின் நியமனத்துக்கு இளைஞர்களின் ஆதரவை பெற்றது.

ஆனால் சிங்கள பேரினவாதம் தனது அரச இயந்திரத்தின் இன்னொரு கட்டமைப்பான சிறைச்சாலை திணைக்களத்தின் ஆணையர் பிரிய தெல்கொட மூலம் இந்த நகர்வை தடுத்தது சிங்களத்தின் ஜனநாயம் மீதான இன்னொரு அடியாகும்.

இதன்மூலம் இன்னொரு படிப்பினையையும் தமிழ்தேசியம் பெற்று கொண்டது. உலகம் வாய்கிழிய கத்தி கூப்பாடு போடும் ஜனநாயத்தின் ஓட்டைகளை பயன்படுத்தி சிங்களம் எப்போதும் தமிழர்மீது அடக்குமுறையை இனஅழிப்பை தொடரும் என்பதே அது.

தமிழர்களின் போராட்ட பாதையில் அர்ப்பணங்களும், தியாகங்களும், பெருவீரமும் நிறைந்த ஒரு போர் வான்வரை எழுந்தாடிய போது தமிழர்களின் போராட்டம் சர்வதேச வாசல்படியின் வெகு கொதிநிலையான ஒன்றாக உருமாறிய பொழுதினில் இலங்கை பாராமன்றத்தை தமிழர்களின் விடுதலைக்கான ஒரு பரப்புரை மேடையாக பயன்படுத்தும் ராஜதந்திரம் எழுந்தது. அத்தகைய ஒரு வரலாற்று தேவையும் எழுந்து இருந்தது.

மானுட வரலாறு கண்டு கேட்டறிந்திராத ஒப்பற்ற ஒரு விடுதலைப் போராட்ட களத்தினில் நின்றிருந்த தமிழர் தேசிய தலைமை இலங்கை பாராளுமன்றத்தின் இனவெறி முகத்தினை தமிழர்களுக்கு புரிய வைத்து அதனை பொருட்படுத்தாத ஒரு அரசியலை உருவாக்கி வைத்திருந்த அதே நேரம் அந்த பாராளுமன்றத்தின் மேடையை தமிழர்களின் உரிமை வேட்கையை வெளிப்படுத்தும் ஒரு மேடையாகவும் மிகவும் ஆழமான வழிநடத்தலில் செய்து வந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் இந்த பொறிமுறையால் வெகுண்டெழுந்த சிங்களம் தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதிகள் மீதே கொலை வெறியை கட்டவிழ்த்துவிட்டது. தன் ஜனநாயக நடிப்பு முகமூடியை கழற்றி வீசிய சிங்கள த்தை அம்பலம் செய்தது தமிழ்தேசியம்.

ஆனால் 2009 மே மாதத்துக்கு பின்னர் எல்லாமே தலைகீழானது. இலங்கை பாராளுமன்றம் தமிழர்களின் தாயக விடுதலைப் போராட்ட பாதையில் ஒரு மேடையாக பயன்படுத்திய தன்மை கொஞ்சம் கொஞ்சமாக மாறி ஏதோ இலங்கை பாராளுமன்றத்தின் மூலம் மட்டுமே தமிழர்களின் உரிமையை வென்றெடுக்க முடியும் என்ற பெரும் மாயத் தோற்றம் உருவாக்கப்பட்டது.

துரதிஷ்டவசமாக இந்த 2015 தேர்தலில் எவருமே மறந்துபோய்க்கூட" இலங்கை பாராளுமன்ற தேர்தல் ஒரு பிரச்சார மேடை மட்டுமே" என்பதை சொல்லவே இல்லை. ஏதோ இந்த தேர்தலால் ஒரு பெரும் மாற்றமொன்று நிகழப்போகுது என்ற குடுகுடுப்பைகாரனின் குரலாகவே எல்லோர் பிரச்சாரமும் அமைந்திருந்தது. சிங்களத்துடன் இணக்க அரசியலை செய்திருந்த இலங்கை பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் அமிர்தலிங்கத்தை கூட 83ல் தலைமறைவாக மாற்று வேடத்தில் சிங்கள தலைநக்ரை விட்டு தமிழ் நாட்டுக்கு தப்பி ஓட வைத்த பாராளுமன்றம் ஒருபோதும் தமிழர்களுக்கு உரிமைகள் எதனையும் தந்துவிடப்போவது இல்லை என்ற பெரிய வரலாற்றுப் பாடத்தை எந்தவொரு தமிழ்வேட்பாளரும் சொல்லாமல் விட்டது ஏன் என்று தெரியவில்லை...

அவர்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் தமிழ்மக்கள் ஒன்றை தெளிவாக தெரிந்து புரிந்து வைத்திருக்க வேண்டியது காலம் தந்த கட்டளையாக இருக்கிறது. இந்த பாராளுமன்றத்தின் பெரும்பான்மை கட்சிகளின் தலைவர்கள் தான் பகிரங்கமாகவே " போர் என்றால் போர்" என்றும் தமிழர்கள் மீதான விமான, எறிகளை தாக்குதல்களை நியாயப்படுத்திய ஒவ்வொரு சொல்லும் இன்றும்கூட புதிய புதிய ஜனாதிபதிகளாலும், பிரதமர்களாலும் அதே அறைகூவலுடன் எமக்கு எதிராக முரசறையப்படுகின்றது. இந்த பாராளுமன்றத்தை எமது உரிமை வேட்கையை, எமக்கு எதிராக சிங்களம் தொடர்ந்து நடத்தும் இனிஅழிப்பை உலகுக்கு சொல்லும் ஒரு சாளரமாக பயன்படுத்தலாம் அவ்வளவேதான். வேறு எதுவுமே இல்லை.

மற்றப்படி, எமக்கான விடுதலை என்பது எமது மக்கள் ஒன்றிணைந்து எழுந்து, உலக தமிழினத்துடன் கைகோர்த்து, உலகம் முழுதும் எமக்காக குரல் கொடுக்கும் அனைத்து தரப்புடனும் சேர்ந்தெழுந்து போராடும் ஒரு பொழுதில்தான் எமது விடுதலை கைகூடும். இதற்கான உறுதியை பெற நாம் வேறு எங்கும் போய் தேட வேண்டியதில்லை. கடலினில், தலையினில், வானத்தில் என்று வீரம் விளைத்த எம் மாவீரர்களின் உறுதியில் இலட்சத்தில் ஒரு பங்கை எம் மனதில் உள்வாங்கினாலே போதும். அது ஒன்றே எம் தாயகவிடுதலைக்கான ஒரே வழி. ஒரே பாதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடைசாய்ந்த உழவு இயந்திரம்



அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிந்தவூர் அல்லி முல்லை சந்தி பிரதான வீதியில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை உழவு இயந்திரமும் சிறிய கன்டர் ரக வாகனமும் விபத்துக் குள் ளானதில் உழவு இயந்திரம் குடைசாய்ந்துள்ளது.

# நல்லாட்சி தொடர்வது உறுதியாகியுள்ளது!

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வென்றெடுக்கப்பட்ட நல்லாட்சி மக்களினால் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதில் எவ்வித சந்தேகமும் இல்லை என பிரதமரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் நீதியானதும் சுதந்திரமானதுமான முறையில் தேர்தல் ஒன்றை முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கும் தனது நன்றியினை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

எட்டாவது பாராளுமன்றத்துக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான தேர்தல் வாக்களிப்புக்கள் நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் நீதியானதும் சுதந்திரமானதுமான முறையில் நடைபெற்றுள்ளது.

அந்தவகையில் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி மக்களினால் வென்றெடுக்கப்பட்ட நல்லாட்சியை தொடர்ந்தும் முன்னெடுப்பதானது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் நீதியானதும் சுதந்திரமானதுமான முறையில் தேர்தல் ஒன்றை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த நல்லாட்சியின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸார் மற்றும் அரச ஊழியர்கள் உள்ளிட்டோருக்கு எனது நன்றியினை தெரிவிக்கின்றேன்.

எமது நாட்டின் வரலாற்றில் கடந்தகால தேர்தல்களுடன் ஒப்பிடும் போது நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் நீதியானதும் சுதந்திரமானதுமான முறையில் நடைபெற்ற இந்த தேர்தலில் மக்கள் எவ்வித அச்சமும் இன்றி சுயாதீனமான முறையில் வாக்களிக்கின்றார்கள்.

இந்த தேர்தலானது நீதியான தேர்தலாகவும் எமது நாட்டின் வரலாற்று ரீதியில் நடைபெற்று முடிந்த ஜனநாயக தேர்தலாகவும் அமையும் என்பதில் எவ்வீத சந்தேகமும் இல்லை.

இன்று நாம் அனைவரும் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து கடந்த ஜனவரி மாதம் வென்றெடுத்த நல்லாட்சி அரசாங்கத்தை தொடர்ந்து முன்னெடுக்கும் புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளோம்.

எனவே இச்சந்தர்ப்பத்தில் பிரதமர் என்ற ரீதியில் நல்லாட்சி அரசாங்கத்தை தொடர்ந்து முன்னெடுக்க தமது வாக்கினை பதிவு செய்த அனைத்து வாக்காளர்களுக்கும் எனது நன்றியினை கூறுகின்றேன் என மேலும் தெரிவித்தார். (இ-7)

## 24 மணித்தியாலத்தில் 80 பேர் உயிரிழப்பு

ஏமனின் அரசு ஆதரவுப் படையினருக்கும், கிளர்ச்சி படையினருக்கும் இடையே நடைபெற்ற சண்டையில், நேற்று முன்தினம் 24 மணி நேரத்தில் 80 பேர் உயிரிழந்ததாக இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சண்டையின் போது பலியான கிளர்ச்சியாளர்களின் 50 உடல்கள் தாயெஸ் நகரில் கண்டெடுக்கப்பட்டன. மேலும், சண்டையில் 31 அரசு ஆதரவுப் படையினர் பலியானர்கள்.

சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படையினரின் வான்வழித் தாக்குதல்களின் உதவியுடன் தாயெஸ் நகரில் அரசு ஆதரவுப் படையினர் முன்னேற்றம் கண்டு வருகின்றனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மார்ச் மாதத்தில் இருந்து நடந்துவரும் உள் நாட்டு போரில் கிட்டத்தட்ட 4 ஆயிரத்து 300 பேர் இதுவரை பலி யாகியுள்ளனர். 21 மில்லியன் மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர். (இ-7)



சர்வோதயம் அமைப்பின் பொதுச் செயலாளர் கலாநிதி ஏ.ரி.வின்னியா ஆரியரட்ணத்தின் 53 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி நாடளாவிய ரீதியில் மாவட்ட அலுவலகங்களில் பயன்தரு மரக்கன்றுகள் அண்மையில் நடப்பட்டன.

இதன்போது சர்வோதயம் அமைப்பின் பணியாளர்களினால் மரநடுகைச் செயற்றிட்டம் இடம்பெறுவதைப் படத்தில் காணலாம். (படம்:-உ.சாளின்)

## இன்று ஒரு தகவல்

### மனித மனமா? யுத்த களமா?

இந்த மனிதன் நல்லவன் என்றோ, கெட்டவன் என்றோ இப்போதெல்லாம் யாரையும் நாம் தரம் பிரிக்க முடிவதில்லை. எப்போது கெட்டவனாய் இருப்பான்? எப்போது நல்லவனாய் இருப்பான்? என்று தீர்மானமாகச் சொல்ல முடிவதில்லை. நாற்பது நாள் கடும் விரதம் இருந்து சபரி மலை செல்லும் என் நண்பர் ஒருவர் திரும்பி வந்ததும் கெட்டுப்போவதற்கு வசதியாக மது, மாது இவற்றை ஏற்பாடு செய்ய வேறொரு நபரிடம் ஞாபகமாகப் பணம் கொடுத்துவிட்டுத்தான் மலைக்கே புறப்படுவார். இன்னொரு நண்பர் கார்த்திகை ஒன்றில் மாலை போடவேண்டி இருப்பதால் ஐப்பசி கடைசி அன்றே அளவற்ற அக்கிரமங்கள் செய்வார்.

இவர்கள் தேவரா? அசுரரா? சில நேரங்களில் தேவனாகவும் சில கணங்களில் அசுரனாகவும் இருக்கும் இவர்களை தேவாசுரர் என்று அழைக்கலாமா? இவ்வளவு ஏன்? நாம் சில நேரங்களில் சாந்தமாக இருக்கிறோம். அன்பாகப் பேசுகிறோம். சிலநேரங்களில் கோபத்தில் கத்துகிறோம். பலரை அடிக்கிறோம். துடிக்கத் துடிக்கக் குழந்தைகளைக்கூட அடிக்கிறோம். அப்போது நாம் யார்? நமது குழந்தையை முத்தமிட்டபோது நாம் தேவன். முதுகுத் தோல் உரிய அடிக்கிறபோது அசுரன்.

மகளிடம் தாயாக அன்பைப் பொழியும் சில பெண்கள் மருமகளிடம் இராட்சசியாக நடக்கிறார்களே ஏன்? காலையில் கலகலப்பாக கையசைத்தபடி பள்ளிக்கூடம் போன நம் தேவக்குழந்தை மாலையில் வீடு திரும்பியதும் ஏதோ துயரத்தை மனதில் வைத்துக்கொண்டு அலறி ஆர்ப்பாட்டம் செய்து தாயின் கையைக் கூடக்கடிக்கிறதே ஏன்? இந்தத் தேவனை அசுரனாக்கியது யார்? அல்லது எது?

க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என்று உலகின் கால அளவைச் சதுர்யுகம் என்று நான்கு யுகங்களாக வகுத்தார்கள். முதல் யுகத்தில் தேவர்கள், அசுரர்கள் வேறு வேறு உலகத்தில் வாழ்ந்து சண்டையிட்டார்கள். இரண்டாம் யுகத்தில் ஒரே உலகத்தின் வேறு வேறு பகுதிகளில் இருந்து சண்டையிட்டார்கள். மூன்றாம் யுகத்தில் ஒரே குடும்பத்தில் வேறு வேறு மனிதர்களாக இருந்து சண்டையிட்டார்கள். கலியுகத்தில் ஒரே மனிதனின் வெவ்வேறு எண்ணங்களாக இருந்து சண்டையிடுகிறார்கள்.

அதனால்தான் மனிதர்கள் மனஅமைதியிழந்து தவிக்கிறார்கள். சண்டை நடக்கிற இடம் எங்காவது நன்றாக இருக்குமா? மனிதன் மனங்களுக்குள்ளேயே தேவ, அசுர யுத்தம் நடக்கிறது. இந்த யுத்தத்தை நிறுத்தாமல் ஓயாது நடக்க நீங்கள் அனுமதித்தால் உங்கள் வாழ்வு அமைதியிழந்து நாசமாகும். எனவே அசுர எண்ணங்களை அழித்து நாம் தேவனே என்கிற வெற்றிச் செய்தியை உலகிற்கு அறிவிக்க வேண்டும். நமக்குள் நடக்கும் தேவாசுர யுத்தத்தை மேலும் நீடிக்க நாம் அனுமதிக்கக்கூடாது. ஒவ்வொரு தேவ அசுர யுத்தத்திலும் கடவுள் தேவர்கள் பக்கமே இருந்து வெற்றி தந்துள்ளார்.

இறைவழிபாடு, இறை நம்பிக்கை மூலம் நாமும் நமது தேவ சக்திகளை வலுப்படுத்த வேண்டும். அசுர எண்ணங்களை அழித்தொழிக்கவேண்டும். அன்பு, கருணை, விட்டுக்கொடுத்தல், மன்னித்தல், மறத்தல் இவையே தேவ எண்ணங்கள்.

பழிவாங்குதல், துன்புறுத்தல், பகை பாராட்டுதல், அகங்காரம் கொண்டு பிறரை அவமதித்தல் இவை அசுர எண்ணங்கள். தேவ எண்ணங்களைப் பெருக்கி அசுர எண்ணங்களை அழித்தால் கண்டிப்பாக மனிதனும் தெய்வமாகலாம். அப்படியானவர்களே நாயன்மார்கள், ஆழ்வார்கள் பக்தவிஜயம் சொல்லும் திருமால் அடியார்கள். ஏகநாதர் என்ற பாண்டுரங்க பக்தர் கங்கையில் குளித்துவிட்டுக் கரையேறினார். ஒரு மூர்க்கன் அவர் மீது வெற்றிலை பாக்கு எச்சிலை உமிழ்ந்தான். அவர் அவனோடு சண்டையிடாது மறுபடி கங்கையில் நீராடிக் கரையேறினார். மறுபடி எச்சிலை அவர்மீது உமிழ்ந்தான். இப்படி 108 முறை நடந்தது.

108 ஆம் முறை மூர்க்கன் மனம் வருந்தி ஏகநாதர் பொறுமையைக் கண்டு காலில் விழப்போனான். தடுத்து முரடன் காலில் விழுந்தார் ஏகநாதர். தவறு இழைத்து விட்டோமே என்று மூர்க்கன் வருந்தினான். அவரோ அப்பா எவ்வளவு புனிதமான நதி கங்கை.ஒருமுறை குளித்தாலே மிகமிகப்புண்ணியம். இன்று உன்னுடைய தயவால் அல்லவா இதில் 108 முறை குளித்தேன். உன் கருணை இல்லை என்றால் ஒரு தடவைதானே குளித்திருப்பேன் என்றார். ஏகநாதர் தேவர் ஆனதோடு ஒரு முரடனையும் தேவன் ஆக்கினார். இதுவல்லவா முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவுக்கு-மைத்திரி கொடுத்த மூன்றாவது அடி!



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழு உறுப்பினர்கள் 25 பேரை கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீக்கியுள்ளதாக வெளியாகியுள்ள தகவலானது ஜனாதிபதியால் மகிந்த தரப்பினருக்கு கொடுத்த மிகப்பெரிய மூன்றாவது அடியாகவே கருதப்படுவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பதவியில் இருந்து நீக்கப்பட்டவர்களின் பலர் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அறிவித்தலின் பின்னர் கொழும்பு டாலி வீதியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகம் வெறிச்சோடிக் காணப்படுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இது ரணில் விக்கிரமசிங்கவிற்கு கூடுதல் சாதகத் தன்மையை ஏற்படுத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே இரண்டு அறிக்கைகளை வெளியிட்டிருந்தார்.

அவ்வறிக்கைகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு பிரதமர் பதவியை வழங்கப்போவதில்லை என்பதை திட்டவட்டமாக தெரிவித்திருந்தார்.

வரலாற்றில் எந்த முன்னாள் ஜனாதிபதியும் பதவியிலிருந்து இறக்கப்பட்ட பின்னர் பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை.

தோல்வியின் பின்னர் நாடாளுமன்ற பதவிக்காக போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஜனாதிபதியின் மேற்கூறிய இரண்டு அறிவிப்புக்களும் அவருக்கு தேர்தலில் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

பொதுத் தேர்தலில் களமிறங்கியிருக்கும் மகிந்த ராஜபக்ஷவை ஓரம் கட்டுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாத்திரமல்லாது, அக்கட்சியின் ஆலோசகர்களில் ஒருவரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் களத்தில் இறங்கினார்.

இதனைத் தவிர, மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது குடுபத்தினருக்கு எதிராக ஊழல் மோசடி, கொலை உட்பட பல்வேறு பாரிய குற்றச்சாட்டுக்கள் இதுவரை சுமத்தப்பட்டு அது தொடர்பான விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் தமக்கும் தனது குடும்ப உறுப்பினருக்கும் எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்புவதற்காகவே அவர் மீண்டும் அரசியலுக்கு வந்ததாக பேசப்படுகின்றது.

எனினும் மைத்திரிபால சிறிசேனவின் அறிவிப்பும் தேர்தல் தொடர்பான கருத்துக்கணிப்பு அறிவிப்புக்களும் மகிந்தவின் கனவுக்கு விழுந்த மிகப் பாரிய அடியாகவே கருதப்படுவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

# முதுகுவலியை தவிர்க்க 6 வழிகள்!

நீண்ட நேரம் உட்கார்ந்தே வேலை செய்பவர்கள், குறிப்பாக கம்யூட்டர் முன்பு உட்கார்ந்து வேலை செய்பவர்கள் சந்திக்கும் முக்கியப் பிரச்சினை முதுகுவலி.


சரியான முறையில் அமர்ந்து வேலை செய்தால், முதுகுவலியைத் தவிர்க்க முடியும் என்கின்றனர் மருத்துவர்கள்.

**தலையை நேராக வைக்க வேண்டும்**

கணிப் பொறியின் திரைக்குச் சரியான உயரத்தில் தலை (பார்வை) இருக்க வேண்டும். தலையை உயர்த்தியோ, தாழ்த்தியோ, திரையைப் பார்க்குமாறு உட்காரக்கூடாது.

எனவே, அதற்கேற்ற வகையில் மேசையும் சாய்வு நாற்காலியும் இருக்க வேண்டும். கழுத்துக்கு அழுத்தம் தருவது முதுகுவலிக்குக் காரணமாகிவிடும்.

**சற்று சாய்ந்து உட்காருவது சிறப்பு**



நாற்காலி 110 டிகிரி அளவுக்குச் சாய்வாக இருக்கட்டும். இருக்கைக்கு ஏற்றவாறு, இடுப்புக்கு அழுத்தம் தராமல் சற்று சாய்ந்து உட்கார வேண்டும். கணிப்பொறி இருக்கும் பக்கம் முன்னோக்கி சாய்வதோ, அளவுக்கு அதிகமாகப் பின்நோக்கிச் சாய்வதோ கூடாது. பிரத்யேக சாய்வு நாற்காலியைப் பயன்படுத்த வேண்டும்

கணிப்பொறியில் அமர்வதற்கு ஏற்ற, பிரத்யேக சாய்வு நாற்காலி (Computer chair) இருக்க வேண்டும். எழுதுவதற்கு, சாப்பிடுவதற்கு என மற்ற செயல்களுக்கு இந்த நாற்காலியைப் பயன்படுத்தக் கூடாது. மேசையின் உயரத்துக்கும் உங்களின் உயரத்துக்கும் ஏற்றவாறு அட்ஜஸ்ட் செய்யவும் வசதியுள்ள சாய்வு நாற்காலிகளைப் பயன்படுத்த வேண்டும். உடல் எடைக்குத் தகுந்த, முதுகைக் குறிப்பாக கீழ்முதுகைத் தாங்குவது போன்ற நாற்காலியைத் தேர்வு செய்வது அவசியம்.

**கைப்பிடிகளைப் பயன்படுத்த வேண்டும்**

நாற்காலியில் இருக்கும் கைப்பிடியின் மேல் கைகளை வைக்க வேண்டும். கைப்பிடிகளின் உயரத்துக்கு இணையாக, விசைப் பலகை (கீபோர்டு) இருக்க வேண்டும். கைப்பிடிக்கு உயரமாகவோ அல்லது கைப்பிடிக்கு கீழாகவோ விசைப்பலகை இருக்கக் கூடாது.

**தொடைகளுக்குப் பக்கபலம் அவசியம**

நாற்காலியின் நுனியில் உட்காரக்கூடாது. தொடைகள் முழுவதுமாக நாற்காலியில் இருக்குமாறு அமர வேண்டும். தொடைகளைத் தொங்கப்போடக் கூடாது. தரைக்கு இணையாக தொடைகள் இருக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

**பாதங்களைத் தொங்கவிடக கூடாது**

பாதங்கள் படத்தில் காட்டியுள்ளபடி சாய்வாக இருக்க வேண்டும். பாதங்கள் தொடைக்கு செங்குத்தாகவோ, கெண்டைக் காலை மடக்கி உள் இழுத்தோ வைக்கக் கூடாது. பாதங்கள் மற்றும் கெண்டைக்கால் சரியான நிலையில் இல்லை எனில, இடுப்புப் பகுதியில் அழுத்தம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானத்தாக்குதலில் 100 பேர் பலி!

# ஐ.நா.கடும் கண்டனம்

சிரியா தலைநகர் டமாஸ்கஸிற்கு அருகே அரசு படைகள் நிகழ்த்திய தாக்குதலை எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என ஐ.நா.கடும் கண்டனம் தெரிவித்ததோடு மேலும் பலியானவர்களின் எண்ணிக்கை 100 ஆக உயர்ந்துள்ளது எனவும் தெரிய வந்துள்ளது.

கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருந்த தோஹா பகுதியில் அரசு படைகள் தொடர்ச்சியான விமான தாக்குதலில் ஈடுபட்டன. இந்த தாக்குதலில் சுமார் 100 இறகும் மேற்பட்டவர்கள் இறந்திருக்கலாம் எனவும், 240 பேருக்கும் அதிகமானவர்கள் படுகாயம் அடைந்திருப்பதாகவும் சிரியாவில் செயறபடும் மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த கொடூர தாக்குதலில் பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் பொது மக்கள் என்று தெரியவந்துள்ளது. இது பற்றி கருத்து தெரிவித்துள்ள ஐ.நா. சபை, “பொது மக்கள் கூடும் சந்தை பகுதியில் குண்டு வீசுவதை எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது” என தெரிவித்துள்ளது. நான்கு ஆண்டுகளாக நடந்து வரும் உள்நாட்டு போரில் நடத்தப்பட்ட மிக கொடிய தாக்குதல் இது என மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. (இ-7)

# விமானம் விழுந்த இடத்தில் 38 சடலங்கள் கண்டுபிடிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் விமானம் விழுந்து நொறுங்கிய இடத்தில் 38 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவின் ஜெயபுரா நகரில் உள்ள சென்தானி விமான நிலையத்தில் இருந்து பாபுவா மாகாணத்தில் உள்ள ஒக்சிபில் நகருக்கு நேற்று முன்தினம் ஒரு விமானம் புறப்பட்டு சென்றது.

திரிகானா விமான சேவை நிறுவனத்துக்கு சொந்தமான ஏ.டி.ஆர். 42-300 ரகத்தைச் சேர்ந்த அந்த விமானத்தில் 49 பயணிகள் மற்றும் 5 சிப்பந்திகள் என மொத்தம் 54 பேர் பயணம் செய்தனர். பயணிகளில் 5 பேர் குழந்தைகள் ஆவார்கள்.

பலத்த காற்றுடன் கன மழை பெய்து கொண்டிருந்ததாலும், வானில் மேகமூட்டம் அதிகமாக இருந்ததாலும் விமானம் மலையில் விழுந்து நொறுங்கியதாக கூறப்பட்டது. விமானம் மலையில் விழுந்து நொறுங்கியது பற்றிய தகவல் கிடைத்ததும், அந்த பகுதிக்கு மீட்புக்குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்கள் தேடும் பணியில் ஈடுபட்டனர். விமானத்தின் சிதைவு பாகங்களை தேடுதல் பணியில் ஈடுபட்ட விமானம், விமானத்தின் நொறுங்கிய பாகங்களை மலைப்பகுதியில் கண்டது. இதனையடுத்து தரைவழியாக தேடும் படையானது அப்பகுதியை நோக்கி அனுப்பப்பட்டது.

தற்போது இந்தோனேஷிய விமானம் விழுந்து நொறுங்கிய இடத்தில் 38 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டு போக்குவரத்து துறை அமைச்சகம் வெளியிட்டு உள்ள தகவலில், “விமானம் விழுந்து நொறுங்கிய இடத்தில் குழந்தை உட்பட 38 பேரது சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மோசமான வானிலை காரணமாக அவற்றை உடனடியாக வெளியே கொண்டு வர முடியாத நிலை நீடிக்கிறது,” என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. (இ-7)

# பாங்கொக் குண்டுத் தாக்குதலில் பலி எண்ணிக்கை 27ஆக உயர்வு

தாய்லாந்து தலைநகர் பாங்கொங்கில் நேற்று முன்தினம் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் பலி எண்ணிக்கை 27 ஆக உயர்ந்து ள்ளது.



மத்திய பாங்கொக்கின் சில்டாம் மாவட்டத்தில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள ஒரு தெருவில் நேற்று முன்தினம் திடீரென சக்தி வாய்ந்த குண்டுவெடித்தது. பிரபல கோவில் மற்றும் வணிக வளாகம் அருகே இச்சம்பவம் நடந்தது. பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்துச் சிதறியதும் பலர் தூக்கி வீசப்பட்டு இறந்தனர். அவர்களின் உடல்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. மோட்டார் சைக்கிள்கள் தீப்பிடித்து எரிந்தன. இதனால் அப்பகுதி புகை மண்டலமாக காட்சியளித்தது.

இதில் 12 பேர் பலியானதாகவும், 20 பேர் காயமடைந்ததாகவும் முதற்கட்ட தகவல்கள் தெரிவிததன. பின்னர் காயமடைந்தவர்களில் பலர சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்தனர். இரவு 9 மணி நிலவரப்படி பலி எண்ணிக்கை 27 ஆக அதிகரித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட சுமார் 78 பேர் காயமடைந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதறக்கிடையே குண்டு வெடித்த பகுதியில் வெடிகுண்டு நிபுணர்கள் தீவிரமாக சோதனை செய்தனர். அப்போது கோவில் வளாகத்தில் ஒரு வெடிக்காத குண்டு கிடந்ததை கண்டு பிடித்து அகற்றினர்.வணிக வளாகத்திற்கு எதிரே மற்றொரு குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஆளும் இராணுவக் குழு செய்தித் தொடர்பாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விண்வெளி விவசாயத்தின் விளைபொருள் உணவாகிறது



விண்வெளிக்குத் தமது ஆய்வு உபகரணங்களை ஆய்விற்காக அனுப்புகையில் அதிக சிரமங்கள் எதிர்கொள்ளப்படுவதில்லை. எடுத்துச் செல்லப்பயன்படும் உந்து இயந்திரத்தின் கொளளளவிற்கு ஏற்ற திணிவிலான ஆய்வு உபகரணங்களை உள்ளடக்கி அந்த விண்பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், ஆய்விற்காக விண்வெளி வீரர்களை அனுப்புகையில் பல்வேறு விடயங்களை கருத்திற்கொள்வது அவசியம்.

வீரர்கள் பயணிக்கும் விண்கலத்தில் ஆய்வு உபகரணங்களுடன், ஆய்வாளர்களுக்குத் தேவையான உணவு, சுவாசிக்க ஒட்சிசன் வாயு மற்றும் அருந்துவதற்கு நீர் என சராசரி மனிதருக்கு அத்தியாவசியமானவற்றினை, அவர்களின் பயணக்காலத்திற்குப் போதுமான அளவிற்கு அனுப்பி வைப்பது அவசியம். இந்த அத்தியாவசியப் பொருட்களின் திணிவு விண்வெளிப்பயணத்திற்கு ஒரு சவாலான விடயமாகத் திகழ்கின்றது. ஏனெனில், இப்பொருட்களை எடுத்துச்செல்வதற்காக ஆய்வு உபகரணங்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய அழுத்தத்திற்கு பயண ஏற்பாட்டாளர்கள் உள்ளாகின்றனர்.

எனவே, இச்சவாலினை எதிர்கொள்வதற்கான வழிமுறைகளில் ஒன்றாக, விண்வெளியில் விவசாய முயற்சிகளை மேற்கொள்வதற்கு எடுத்த ஆய்வாளர்களின் முயற்சி வெற்றி பெற்று, கடந்த 10 ஆம் திகதி முதற் தடவையாக விண்வெளியில் விளைந்த ‘லெற்றிஸ்’ (lettuce) தாவர இலைகளை ஆய்வாளர்கள் தமது உணவாக்கியுள்ளனர்.

நாம் வாழும் பூமியில் தாவரங்களே எமது உயிர் வாழ்வின் ஆதாரமாகத் திகழ்கின்றன. எமது மற்றும் விலங்குகளின் நுகர்விற்கான விளைபொருட்களைத் தருவதுடன், இத்தாவரங்களில் நடைபெறும் ஒளித்தொகுப்பின் மூலம் வெளிவரும் ஒட்சிசன் வாயு உயிரினங்களின் சுவாசத்திற்கு துணை புரிகின்றது.

தாவரம் வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளை விண்வெளியில் ஏற்படுத்திக் கொடுத்தால், அத்தாவரம் வளர்ந்து உணவினைத் தரும் அதே வேளை, ஆய்வாளர்களின் வெளிச் சுவாசத்தில் வெளியேறும் காபனீரொட்சைட் வாயுவினைப் பயன்படுத்தி ஒட்சிசன் வாயுவினையும் உற்பத்தி செய்யும். மேலும், ஏலவே தயாரிக்கப்பட்ட பழைய உணவுகளைத் தொடர்ந்து உண்டு சலித்துப்போன விண்வெளி வீரர்களுக்கு தாவரத்திலிருந்து உடன்பறிக்கப்பட்ட தாவர உணவுகள் உற்சாகத்தினை வழங்கும். எனவே, விண்வெளி ஆய்வுகளுக்கான பரிசோதனைக் களமாகத் திகழும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் விண்வெளி விவசாய நடவடிக்கைகள் அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான ‘நாஸா’ (NASA) வினால் முன்னெடுக்கப்பட்டது.

விண்வெளியில் தாவரங்களை வளர்ப்பதற்கான ஆதாரங்களை Orbital Technologies Corp என்ற நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் தயாரித்து வழங்கியது. இதனுள்ளே தாவர விதைகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், தாவரங்களுக்கான பசளை வகைகளை உரிய வகையில் வழங்கும் தொகுதியும் ஒருவகைக் களிமண்ணும் உள்ளே காணப்பட்டன. இத்தாவரங்களுக்கு ஒளியினை வழங்குவதற்காக சிவப்பு, நீலம் மற்றும் பச்சை நிற ஒளிகளை வழங்கும் இருவாயிகளும் இத்தாவர வளர்ப்புத் தொகுதியில் இணைக்கப்பட்டிருந்தன.

ஒளிகாலும் இருவாயிகள் தரும் ஒளியில் தாவரங்களை வளர்க்கும் பொறிமுறை நுட்பம் 1990 களில் கண்டறியப்பட்டிருந்தது. இதில் நீலம் மற்றும் சிவப்பு ஒளிகளை வழங்குவது சக்தி வினைத்திறனுடையதாக அமைவதுடன், தாவர வளர்ச்சியில் அதிக பங்களிப்பு செய்வதும் ஆய்வாளர்களால் அறியப்பட்டிருந்தது. ஆனால், விளைவாகும் விளைபொருள்கள் மீதான ஊதா நிறப்படர்வுத் தோற்றம் மனிதரின் நுகர்வு நாட்டத்தினைக் குறைப்பதாக அமைந்தது. எனவே, பச்சை நிற ஒளிதரும் ஒளிமுதலும் இதனுடன் இணைக்கப்பட்டது. இக்கட்டமைப்புக்கள் புவி மேற்பரப்பில் பரிசோதிக்கப்பட்ட அதேவேளை, இரு தாவர வளர்ப்புத் தொகுதிகள் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

இவற்றில் ஒரு தாவர வளர்ப்புத் தொகுதி 2014 மே மாதத்தில் விண்வெளி ஆய்வாளர் Steve Swanson இனால் வளர அனுமதிக்கப்பட்டது.

அந்த ஆய்வாளரின் பராமரிப்பில் வளர்ந்த ‘லெற்றிஸ்’ தாவர இலைகள் 33 நாட்கள் வளர்ச்சியின் பின்னர் அறுவடை செய்யப்பட்டுப் பின்னர், 2014 ஆண்டு ஒக்டோபரில் புவிக்கு எடுத்து வரப்பட்டிருந்தன. அத்தாவர அறுவடைகள் பல்வேறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு அது உணவாகப் பயன்படுத்தத்தக்கதா? என பரிசோதிக்கப்பட்டு அதன் பாதுகாப்புத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதன் இரண்டாம் கட்டப் பரிசோதனையாக மற்றொரு ‘லெற்றிஸ்’ தாவர வளர்ப்புத் தொகுதி கடந்த ஜூலை மாதம் 8 ஆம் திகதி வளர விண்வெளி வீரர் Scott Kelly ஆல் அனுமதிக்கப்பட்டு, 33 நாட்களின் பின்னர், கடந்த ஓகஸ்ட் 10 ஆம் திகதி அறுவடை செய்யப்பட்டது. அறுவடை செய்யப்பட்ட ‘லெற்றிஸ்’ தாவர இலைகளின் மேற்பரப்பினை உரிய வேதிப்பதார்த்தங்களால் தூய்மைப்படுத்திய பின்னர் அதில் பாதியினை மூன்று விண்வெளி வீரர்களும் உணவாக உட்கொண்டனர். மீதியினை குளிர்ப்பதனப் பெட்டியில் இட்டு பாதுகாப்பாக வைத்துள்ளனர். அது பின்னர் புவிக்கு எடுத்துவரப்பட்டு மேலதிக ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இந்த விண்வெளி விவசாயம் குறித்த ஆய்வு முயற்சி விண்வெளி ஆய்வுகளில் புதியதொரு பரிணாம மாற்றத்தினை ஏற்படுத்த இருப்பதுடன், விண்வெளியில் மனிதக் குடியேற்றங்களை ஏற்ப டுத்துவது தொடர்பான கனவு நனவாகும் என்ற நம்பிக்கைக்கும அடித்தளம் இட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கெண்ணும் நிலையத்திற்கு அருகில் துப்பாக்கி ரவைகளுடன் ஐவர் கைது

(கொழும்பு)

மொனராகலையில் துப்பாக்கி மற்றும் ரவைகளை தன்னகத்தே வைத்திருந்த ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 2.20 மணியளவில் மொனராகலை ராஜகிரிய வித்தியாலயத்தின வாக்கெண்ணும் நிலையத்திற்கு அருகில், சந்தேகத்தின் பேரில் ஜீப் வண்டியொன்றை சோதனையிட்ட போது, சந்தேகநபர்கள் கைதாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கைப்பற்றப்பட்ட துப்பாக்கி தொடர்பில் உரிய ஆவணங்கள் உள்ளதாகவும் அவை இம்முறை தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரின் பேரில் உள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும் சந்தேகநபர்கள் செவனகல, திஸ்ஸமஹராம மற்றும் பொரலஸ்கமுவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்களை நேற்று மொனராகலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)



# அதிக வாக்குகளைப் பெற்று ஹரின் பெர்னாண்டோ வெற்றி

(பதுளை)

**பதுளை மாவட்டத்தின் விருப்பு வாக்குகளின் முடிவுகள் இதுவரையில் வெளியாகியுள்ளன. அதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட தலைவர் ஹரின் பெர்னாண்டோ இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளார்.**



ஐக்கிய தேசியக் கட்சி ஹரின் பெர்னாண்டோ - இரண்டு இலட்சத்து 806 வாக்குகளையும், ரவிந்திர சமரவீர 58507 வாக்குகளையும், சமிந்த விஜே சிறி - 58291 வாக்குகளையும், அமிந்த குமார - 53741 வாக்குக ளையும், வடிவேல் சுரேஷ் - 523 78 வாக்குகளையும் பெற்றுள்ளனா்.

ஐக்கிய மக்கள் சுதந்தி முன்னணி நிமல் சிறிபால டி சில்வா - 134,406 வாக்குகளையும், சாமர சம்பத் தஸா நாயக்க - 64418 வாக்குகளையும், தென்னகோன் விதானகமகே - 43517 வாக்குகளையும் பெற்றுள்ளனா். (இ-7)

# அதிக ஆசனம் பெற்ற தரப்பு ஆட்சியமைக்க இடமளிப்போம்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

கூடுதல் ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட தரப்பிற்கு அரசாங்கம் அமைக்க இடமளிப்போம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கூடுதலான நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சிக்கு ஆட்சி அமைக்க அதிகாரம் அளித்து எதிர்க்கட்சியில் இருப்போம். அம்பாந்தோட்டையில் எமக்கு மகத்தான வெற்றி கிட்டியது.

இந்த வெற்றியை ஈட்டுவதற்கு கட்சி உறுப்பினர்கள் உதவியளித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியை விடவும் கூடுதலான உறுப்பினர்கள் எமக்குக் கிடைத்துள்ளனர்.

ஜனநாயக அடிப்படையில் கூடுதல் உறுப்பினர்களை வென்ற அரசாங்கத்திற்கு ஆட்சி அமைக்க இடமளித்து எதிர்க்கட்சியில் இருப்போம் என மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைக் தெரிவித்தார். (இ-7)

# ஒரு ஆண்டு காலத்திற்கு மட்டுமே எதிர்க்கட்சியில் இருப்போம்!

## மனுச நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

நாம் இன்னமும் ஒரு ஆண்டு காலத்திற்கு மட்டுமே எதிர்க்கட்சியில் இருப்போம் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மனுச நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஓராண்டு காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீண்டும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும்.

மகிந்தவிற்கு பிரதமர் பதவி வழங்கப்படாது என கூறப்பட்டது. அவர் தோல்வியடைவார் என கூறப்பட்டது. இவ்வாறு செய்யக் கூடிய சகல விளையாட்டுக்களையும் செய்தும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கணிசமான வெற்றியை பதிவு செய்துள்ளது.

ஈட்டப்பட்ட இந்த வெற்றி மகிழ்ச்சி அளிக்கின்றது.

உண்மையில் எமக்கு பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருக்க முடியும்.

இறுதி நேரத்தில் எமது சுதந்திரக் கட்சியினதும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர்களும் நீக்கப்பட்டனர்.

கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் 13 பேர் நீக்கப்பட்டு, எமது தேர்தல் நடவடிக்கைகள் குழப்பப்பட்டன.

இதனால் மிதக்கும் வாக்குகள் எம்மை விட்டு விலகிச் சென்றன.

எனினும் மகிந்தவை நேசிப்பவர்களை காலி மாவட்ட மக்கள் தெரிவு செய்துள்ளனர், அது மகிழ்ச்சியளிக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

வாக்கு எண்ணும் நிலையத்தில் வைத்து செய்தியாளர்களை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனுச நாணயக்கார இம்முறை தேர்தலில் வெற்றியீட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தாஜுதீன் வாகனத்தின் சாவிக்கு என்ன நடந்தது


(கொழும்பு)

கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ரகர் வீரர் வசீம் தாஜுதீன் மோட்டார் வாகனத்தின் ஸ்டீரிங் மற்றும் சாவி மாத்திரம் முழுமையாக தீப்பற்றி எறிவதற்கு வாய்ப்புகள் உள்ளதா என ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸினால் பரிசோதகர்களிடம் உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதவானிடம் இரகசிய பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகமையவே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த மோட்டார் வாகனம் விபத்துக்குள்ளாகியதா? விபத்துக்குள்ளாகியிருந்தால் தீப்பற்ற வாய்ப்புகள் உள்ளதா? அவ்வாறு தீப்பற்றியிருந்தால் ஸ்டீரிங் மற்றும் சாவி முழுமையாக எறிந்து போவதற்கு வாய்ப்புகள் உள்ளதா? என்பது தொடர்பில் நீதிமன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பரிசோதகர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் மோட்டார் வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்தால் சாரதிக்கு எவ்வாறான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கும்? ஸ்டீரிங் உடைந்து பிரிந்து செல்ல முடியுமா? உடைந்து பிரிந்து செல்ல முடியாவிட்டால் எவ்வாறு பிரிந்தன? ஆகிய விடயங்கள் தொடர்பில் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உதவி ஆணையாளரிடம் உத்தர விடப்பட்டுள்ளது. (இ-7)



கரணவாய் முத்த நயினார் கோவில் தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்ற போது....

(படங்கள் - கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தர பிரதேச சட்டசபை முன்பாக காங்கிரஸ் கட்சியினர் போராட்டம்

## பொலிஸார் தடியடி; 50பேர் காயம்

(லக்னோ)

உத்தரபிரதேசத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து இருப்பதாகவும், ஊழல் மலிந்து விட்டதாகவும், மக்களுக்கு எதிராக அரசு செயற்படுவதாகவும் ஆளும் சமாஜ்வாடி கட்சி மீது காங்கிரஸ் கட்சியினர் குற்றம் சாட்டி வந்தனர். உத்தரபிரதேச சட்டசபையின் மழைக்கால தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் சட்டசபையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி தங்கள் எதிர்ப்பை தெரிவிக்கப்போவதாக காங்கிரஸ் கட்சியினர் அறிவித்திருந்தனர். அதன்படி லக்னோவில் உள்ள லட்சுமண் மேளா மைதானத்தில் சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காங்கிரஸ் கட்சியினர் நேற்று முன்தினம் காலை குவிந்தனர். அங்கிருந்து கோஷமிட்டவாறு சட்டசபையை முற்றுகையிட காங்கிரஸ் கட்சியினர் ஊர்வலமாக முக்கிய வீதிகளின் வழியாக சென்றனர். திட்டமிட்டபடி காங்கி ஸ் கட்சியினர் சட்டசபை முன்பாக முற்றுகை போராட்டம் நடத்தினர். அவர்களுடன் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களும் போராட்டத்தில் பங்கேற்றனர்.

போராட்டம் நடத்திய காங்கிரஸ் கட்சியினர் கலைந்து செல்லாததால் பொலிஸார் அவர்கள் மீது தடியடி நடத்தினர். இதில் 50பேர் காயமடைந்தனர். அதன் பிறகு போராட்டக்காரர்கள் சிதறி ஓடினார்கள். இதனால் அப்பகுதி போர்க்களம் போல காட்சி அளித்தது.

இது குறித்து உத்தரபிரதேச காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் அமர்நாத் அகர்வால் கூறுகையில், காங்கிரஸ் கட்சியினர் அறவழியில் போராட்டம் நடத்தினர். ஆனாலும் பொலிஸார் சிறிதும் கருணையின்றி எங்கள் மீது தடியடி நடத்தினர். சில பொலிஸார் எங்கள் மீது கற்களையும் வீசினர்.

இந்த தாக்குதலில் சிலருக்கு கை, கால்கள் முறிந்தன. அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளரும், மாநில பொறுப்பாளருமான மதுசூதன் மிஸ்திரி, மாநில தலைவர் நிர்மல் காத்ரி, நடிகரும், மேல்-சபை எம்.பி.யுமான ராஜ் பாப்பர் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட காங்கிரஸ் கட்சியினர் காயம் அடைந்தனர்.

காங்கிரஸ் கட்சியினரின் ஊர்வலம், போராட்டத்தால் லக்னோ நகரின் பல இடங்களில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதனால் பாடசாலை குழந்தைகள் உட்பட பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். (3-7)

# கிளி திட்டியதாக பொலிஸில் புகார் பொலிஸ் நிலையம் சென்ற கிளி

## சந்திராபூர் மாவட்டத்தில் சம்பவம்

(சந்திராபூர்)

சந்திராபூர் மாவட்டம் ரஜுரா பகுதியை சேர்ந்த 85 வயது பாட்டி ஜனாபாய். இவரது வளர்ப்பு மகன் ஸ்டீபன் சுரேஷ். இருவரும் அருகருகே உள்ள வீடுகளில் வசித்து வருகின்றனர். ஸ்டீபன் சுரேஷ் செல்லமாக கிளி ஒன்றை வளர்த்து வருகிறார். அதற்கு 'ஹரியால்' என்று பெயர். அந்த கிளிக்கு நன்கு பேச சொல்லி கொடுத்தார். 'சொன்னதை சொல்லுமாம் கிளிப்பிள்ளை' என்பதற்கு இணங்க அந்த கிளி அவர் சொல்லி கொடுத்ததை எல்லாம் சரளமாக பேசியது.

இந்த நிலையில், ஜனாபாய் அந்த பகுதியை கடந்து செல்லும் போதெல்லாம், கூண்டில் அடைப்பட்டிருந்த அந்த கிளி, அவரை கெட்ட, கெட்ட வார்த்தையால் திட்டியதாக தெரிகிறது. முதலில் இதை சாதாரணமாக எடுத்து கொண்ட ஜனாபாய், நாளடைவில் எரிச்சலடைந்தார். கிளியின் அருகில் சென்று கண்டித்தும் அது செவி சாய்ப்பதாக தெரியவில்லை. இத னால், வேறு வழியின்றி பொலிஸ் நிலையம் சென்றார்.

தன்னுடைய வளர்ப்பு மகன் ஸ்டீபன் சுரேசின் பயிற்சிக்கு இணங்க அவனுடைய செல்ல கிளி, தன்னை அசிங்கம், அசிங்கமாக திட்டுவதாக கூறி பொலஸில் புகார் செய்தார். புகாரை பெற்றுக் கொண்ட பொலிஸார், அதனை எந்த பிரிவின் கீழ் பதிவு செய்வது என குழம்பினார்கள். ஆனாலும், மனதை திடப்படுத்திக் கொண்ட அவர்கள், ஜனாபாய், ஸ்டீபன் சுரேஷ் ஆகியோரையும், குற்றம் சாட்டப்பட்ட கிளியையும் அழைத்து விசாரித்தனர்.

ஜனாபாயின் குற்றச்சாட்டு உண்மை தானா? என்பதை ஆராய கிளியை அவர் அருகில் நிற்க வைத்து அதை பேச வைக்க முயற்சித்தனர். ஆன்னாலும், அந்த கிளி பொலிஸாரின் காக்கிச்சட்டையை பார்த்ததும் உஷாரானது. ஏதாவது பேசினால், விபரீதம் ஆகிவிடும் என்பதை உணர்ந்த அந்த கிளி, 'பேச்சு பேச்சு என்னும், பெரும் பூனை வந்தால், கீச்சு கீச்சு என்னும்' என்கிற பழமொழிக்கு ஏற்ப ஒரு வார்த்தை கூட வாயை திறந்து பேசவில்லை. இதனால், குழப்பத்தின் உச்சத்துக்கே சென்ற பொலிஸார், அவர்கள் 3 பேரையும் வீட்டு க்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் குறித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், ஏற்கனவே ஜனாபாயிக்கும் அவருடைய வளர்ப்பு மகனுக்கும் இடையே நிலத்தகராறு இருப்பதாகவும், இதை காரணம் காட்டி அவர் வேண்டுமென்றே இந்த புகாரை தாக்கல் செய்திருக்கலாம் என்றும் பொலிஸார் கருதுகின்றனர். அதேசமயம், சர்ச்சையை ஏற்படுத்திய கிளியை வனத்துறையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தனர். (3-7)

## 15 மாதங்களில் 25 நாடுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி விஜயம்

(புதுடில்லி)

தற்போது ஐக்கிய அரபு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி கடந்த ஆண்டு மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இதுவரை 15 மாதங்களில் 25 நாடுகளுக்கு சென்றுள்ளார்.

பூட்டான், பிரேசில், நேபாள், ஜப்பான் ,அமெரிக்கா,பிஜி,மியன்மார், அவுஸ்திரேலியா, நேபாள், சீசெலஸ் ,மொரிசியஸ் ,இலங்கை, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சீனா, மங்கோலியா, கொரியா, பங்களாதேசம், உஸ்பெகிஸ்தான் கஜகஸ் தான்,ரஷ்யா, துர்க்மெனிஸ்தான், தஜகிஸ்தான், ஐக்கிய அமீரக நாடுகள் ஆகியவற்றுக்கே பிரதமர் மோடி உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

பிரதமர் மோடி பதவியேற்று குறுகிய காலத்திற்குள் அதிகளவானநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டதால் அங்குள்ள பாடசாலை ஒன்றில் பிரதமர் மோடி பயணம் செய்யாத நாடு எது?என்ற கேள்வி பரீட்சை வினாத்தாளில் கேட்கப்பட்டதால் பெரும் [illegible] (3-7)

# இந்திய ஜனாதிபதியின் மனைவி காலமானார்


(புதுடில்லி)

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மனைவியும், இந்தியாவின் முதல் பெண்மணியுமான சுவ்ரா முகர்ஜி காலமாகியுள்ளார்.

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மனைவி சுவ்ராவுக்கு கடந்த 7 ஆம் திகதி திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் டில்லியில் இராணுவ ஆராய்ச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். சுவாச பிரச்சினையால் அவதிப்பட்ட சுவ்ரா தொடர்ந்து தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு வைத்தியர்கள் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளித்து வந்தனர். சுவ்ரா நிலைமை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த சுவ்ரா முகர்ஜி, சிகிச்சை பலனின்றி காலமானார் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

# நல்லூரான் திருவடிக்கு இன்று கொடியேற்றம்



### கொடியேற்றி எமக்கு விடிவைத்தா வேலவா

நல்லையில் வீற்றிருந்து நல்லாட்சி புரியும் வேலவா!
நல்லை நகர் தனியே வள்ளி தெய்வயானையுடன்
வீற்றிருந்து அருள்மழை பொழியும் வேலவா!
நாடி வருவோர்க்கு நல்லருள் புரியும் நல்லூர் வேலவா!
சூரபத்மனை போரினில் வென்ற வேலவா!
எம்மக்கள் இதுவரை பட்டதுயரங்கள்
போதும் வேலவா!
கொடியேற்றம் காண உன் வாயில் வந்தோம் வேலவா!
கொடியேற்றி எமக்கு விடிவைத்தா வேலவா!

நயினைவிசு-இராசநாயகம்

### கொடியேற்ற நன்னாளில்

அல்லல்மிகு அவலங்கள் அவிந்து அழிந்திட
அமைதி இத்தரையில் பிறந்திட
பிள்ளைகளும் பெண்டிரும் பீதியின்றி நடமாடும்
பருவம் உருவாகி வளர்ந்திட
எல்லோரும் ஏற்றமுற இணைந்து ஒன்றாய்
ஆறுமுகன் திருவருள் பெற்றிட
நல்லூரின் கொடியேற்ற நன்னாளில் நாட்டமுடன்
நாடுவோம் வழிபடுவோம் நற்பேறடைவோம்

குளப்பிட்டி.க.அருமைநாயகம்

### அழகான மயில் ஏற

உலகெல்லாம் உய்யவொரு கொடியேற்றம்
உயிரென்ற பயிர் வாழ கொடியேற்றம்
விலகாத அருளோடு சண்முகனார்
அழகான மயில் ஏற கொடியேற்றம்

பனியாகத் துயர் விலகக் கொடியேற்றம்
அணியாக பக்தர் வர கொடியேற்றம்
இனிதான மொழியுடையார் இருவர் வர
அழகனவன் குகன் நல்லூர்க் கொடியேற்றம்

திருமதி.ஜெ.கந்தவேள்

### கருணைக்கடலே கந்தா கொடியேறு

கற்பூர மணமும் சாம்பிராணிப் புகையும்
தெய்வ சந்நிதானத்தில் கமழக் கொடியேறு
பொற்பதி நல்லூர் பெருமை சேர்த்திட
புவனமேத்தும் பரந்தாமன் மருகா கொடியேறு
கற்புடைய மங்கையர்கள்வாழ
கற்றநன் பாவலரும் நாவலரும் காவலரும்
கண்டு களித்திடக் கந்தா
உற்றமில்லை சுற்றமில்லையென உருகுவோர்தம்
உறவுகளின் மத்தியிலே உலவிடக் கொடியேறு

கலாபூஷணம் மு.தணிகாசலம்
கற்கோவளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை பாதுகாப்போம்

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

குருநாகல் மாவட்டத்திலும், நாடு முழுவதிலும் வாழும் மக்கள் தேர்தலில் நாட்டின் நன்மைக்காக புத்திக்கூர்மையுடன் வாக்கினை பயன்படுத்தியுள்ளதாக மேல் மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் ஜே.சீ.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

மாவத்துகம தொகுதியில் அதிக ஆசனங்களை வெற்றி பெற்றதனை தொடர்ந்து தனது ஆதரவாளர்களை சந்தித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்டவர்,

முன்னாள் ஜனாதிபதியை வியூகமாக பயன்படுத்தி குருநாகல் மாவட்டத்தில் முன்னணி பெரும்பான்மையை பெற்றுக் கொள்ள முயற்சித்தன.

எனினும் மக்கள் அவர்களை தோற்கடித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு 07 ஆசனங்களை பெற்று கொடுத்திருப்பது மிகவும் விசேடமான ஒன்றாகும்.

முன்னணி நாடு முழுவதும் இன வெறியை பரப்பி மேற்கொண்ட தேர்தல் பிரசாரங்களை நிராகரித்து ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் அமைப்பதற்காக மக்கள் தெளிவான முடிவொன்றை வழங்கியுள்ளனர்.

மக்கள் தன் மீதும் கட்சி மீதும் வைத்திருக்கும் நம்பிக்கையை அவ்வாறே பாதுகாத்து எதிர்வரும் காலங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐ.ம.சு.முன்னணிக்கு 4 ஆசனம்

## நாமல் முதலிடத்தில்

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 4 ஆசனங்கள் கிடைத்துள்ளதுடன், அக்கட்சி சார்பில் போட்டியிட்ட நாமல் ராஜபக்ஷவுக்கு அதிக விருப்பு வாக்குகள் கிடைத்துள்ளன.

இதேவேளை, ஐதேக சார்பில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சஜித் பிரேமதாசவும் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இதன்படி நாமல் ராஜபக்ஷ, 127,201 விருப்பு வாக்குகளும், சஜித் பிரேமதாச 112,645 விருப்பு வாக்குகளும் பெற்றுள்ளனர்.

அதையடுத்து மகிந்த அமரவீர, சமல் ராஜபக்ஷ, டி.வி.சானக ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

மேலும், ஐதேக சார்பில் திலீப் வேதாராச்சி 65,391 விருப்பு வாக்குகளையும் பெற்று தெரிவாகியுள்ளார்.

ஜேவிபி சார்பில் நிகால் கலப்பதி தெரிவாகியுள்ளார். (இ-7)




நாம் நண்பர்கள் அமைப்பின் ஊடாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (படங்கள்:மானிப்பாய் செய்தியாளர்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## முடிதும்பை

Botanical Name:Leucas aspera
Family: Labiatae
Engl: Thumbe
Sinh: Geta-thumba

பூக்கும் இருவித்திலைத் தாவரம். தனியிலை, எதிர் அடுக்கில் அமைந்திருக்கும்.இலைக்கோணத்தில் உள்ள கணுக்குருத்து இரு கிளைகளாக வளரும். பசிய கிண்ணம் போன்ற பூந்துணர். தூய வெண்ணிற மலர்.பூங்கொத்தில் உண்டாகும்.செடியில் நுண்மயிர்கள் காணப்படும். 5 இதழ்களைக் கொண்ட அல்லிவட்டம் காணப்படும். குழல் வடிவான பரிய புல்லி வட்டம்.10 விளிம்புகளைக் கொண்டது.சூல் தண்டு நீண்டது.4 முட்டை வடிவான நட்லெட் என்ற உலர் கனிகள் உண்டாகும்.

தும்பை இலையை நைத்துக் கசக்கிப் பிழிந்த சாற்றை வடிகட்டி 5 மில்லி அளவு காலையில் மட்டும் கொடுத்து வந்தால் ஆஸ்துமாவில் ஏற்படும் வெளிமூச்சுக்கஷ்டம் குணமாகும்.

இலையில் சிறிது விறுவிறுப்பும் உறைப்பும், விரும்பும் மணமும் உண்டு. 5 நடுத்தரமான கொழுந்து இலைகளுக்கு மேல் ஒருவர் ஆரம்பத்தில் உண்பது கூடாது.அதுவும் அவற்றைதனியாக உண்பதுகூடாது. திருவாத்தி, செம்பரத்தை, நந்தியாவட்டம், துத்தி, வில்வம் இவற்றின் இலைகளில் ஏதாவது ஒன்றுடன் 1:4 என்றவிகிதத்தில்கலந்துண்ணவேண்டும். இந்த விகிதத்தில் சேர்த்து தயா



ரிக்கப்பட்ட சாறு 30மில்லியும் தூள் ஒரு தேக்கரண்டியும் தேனுடன் கலந்து எடுக்க பீனிசம், சுவாசாசய நோய்கள் குணமாகும்.

வாடாத பூக்களை அரைத்து அத்துடன் பாலும் தேனும் சேர்த்தோ அல்லது தக்காளி,தயிர், இஞ்சி துவையல் செய்து சாப்பிடலாம். இவற்றுடன் தக்காளி, தேங்காய் சேர்த்து சட்னி செய்யலாம்.இந்தக் கீரையை கலவைக் கீரையுடன் சேர்த்து சமைத்துண்பது சிறந்தது. இதனால் இருமல், மலச்சிக்கல், சுவாசப்பை கோளாறுகள், கருப்பை பற்றிய நோய்கள் வராமல் தடுக்கலாம்.

5 இலைகளின் தனிச்சாற்றை 90 மில்லி வாழைப்பட்டைச்சாற்றுடன் கலந்து விஷக்கடிகளுக்கு கொடுக்கலாம். தும்பைச் செடியை வேருடன் பிடுங்கி வேரை மட்டும் வெட்டி தண்ணீரில் கழுவிச் சுத்தம் செய்து தூளாக வெட்டி ஒரு சட்டியில் போட்டு 200 மில்லி தண்ணீர் விட்டு 100 மில்லி ஆக சுண்டக்காய்ச்சி வடி கட்டி ஒரு வேளை மட்டும் உட்கொண்டுவர நீர்க்கோவை (பீனிசம்), தலையிடி, சீதளசன்னி தீரும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் மந்தம், வயிற்றுக்கோளாறு குணமாக ஒரு சங்கில் பாதியளவு தண்ணீர் விட்டு அதில் இரண்டு துளி தும்பைச் சாற்றையும் இரண்டு துளி உத்தமாகாணியிலைச் சாற்றையும் கலந்து 2தேக்கரண்டி தேனையும் சேர்த்து கலக்கி காலை,மாலையாக 2 வேளை 3 நாட்கள் கொடுக்கலாம். தினமும் புதியசாறு எடுக்கப்பட வேண்டும்.

சளியால் வரும் காய்ச்சல் குணமாகவும் மூக்குநீர் வடிவதை தடுக்கவும் ஒரு கைப்பிடியளவு தும்பைப் பூவை ஒரு சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து லேசாக வதக்கி 200 மில்லி தண்ணீரை விட்டு நன்றாக கொதிக்க வைத்து இறக்கி அதில் 2தேக்கரண்டியளவு தேன் சேர்த்து கலக்கி 3பங்காக்கி காலை,பகல், மாலையாக 3வேளை 2 நாள் கொடுத்துவர மேற்கூறிய நோய்கள் தணியும். தேள்விஷம் முறியதும்பையிலைகளை மைபோல அரைத்து எலுமிச்சம்பழமளவு உள்ளுக்கு கொடுத்து சக்கையை கடிவாயில் தேய்க்க விஷம் முறியும்.

மாதவிடாய் காலத்தில் இரத்தப் போக்கு கூடுதலாக இருந்தால் தும்பையிலைகளை அம்மியில் வைத்து எலுமிச்சம்பழச்சாறு விட்டுமை போல அரைத்து எலுமிச்சம்பழமளவு எடுத்து 50 கிராம் நல்லெண்ணெயுடன் கலந்து காலை வேளைகளில் மட்டும் 7 நாட்கள் தொடர்ச்சியாக கொடுத்தால் இரத்தப்போக்கு நிற்கும்.

சொறி,தடிப்பு,நமைச்சல் குணமாக ஒரு கைப்பிடி தும்பை இலைகளை சுத்தம் செய்து மிளகு10, பூண்டு 10பல்,சிறிது பெருங்காயம் சேர்த்து அரைத்து உப்பு,புளி,காரம் சேர்த்து துவையல் செய்தும் உண்ணலாம்.

தலைப்பொடுகை நீக்க -தும்பைப்பூ 50கிராம் நல்லெண்ணெய் 100கிராம் சேர்த்து காய்ச்சி தலைக்கு தேய்த்து தலை முழுக தலைவலி குணமாகும்.

தலைவலி நீங்க நல்லெணயில் 25 கிராம் தும்பைப்பூவை போட்டு காய்ச்சி ஆறவைத்து தலைக்கு தேய்த்து தலை முழுக தலைவலி குணமாகும்.

மற்றும் எத்தகைய தலை வலியாக இருந்தாலும் தும்பை இலைச் சாற்றை 1துளி மூக்கில் உறிஞ்ச குணமாகும்.

உடற்கலங்களை அழிய விடாது தேகத்தை ஆரோக்கியமாகவும் பலமாகவும் வைத்திருக்க தும்பை, துளசி, குப்பைமேனி, கரிசலாங்கண்ணி ஆகியவற்றின் சமஅளவு சாற்றில் தாமரை இதழ் சூரணம் போட்டு நெய்,தேன் சேர்த்து லேகியம் செய்து 5கிராம் அளவு தினம் ஒருவேளை சாப்பிட்டுவர உடல் அழியாதுமலர்போல பொலிவுற்று இருக்கும்.பாம்பு விஷம் குறைய முதலுதவியாக தும்பை இலைகளை நைத்து சாறு எடுத்து வடிகட்டி 100மில்லி அளவு எடுத்து அதேயளவு நல்லெண்ணெய் சேர்த்து கலக்கி குடிக்கக் கொடுக்க வேண்டும்.சிலசமயம் வாந்தியாகும். ஆனால் விஷம் பரவாது.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சலான நேர்வழியில் வாழ்ந்தால் பிரச்சினைகளும் கவலைகளும் மட்டும் அல்ல; எதிரிகளும் அமைதியாகி விடுவார்கள். - நேருஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் தாய் உள்ளத்தை நினைந்து நினைந்து பணி செய்மின்

பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்தாயிற்று. கடந்த காலங்களில் நாட்டில் நடந்த தேர்தல்களில் அமைதியாக- சுமுகமாக நடந்த தேர்தல் இது என்று பாராட்டும் அளவில் நிலைமை இருந்தது.

வட மாகாணத்தைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐந்து ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன தலா ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளன.

வடபுலத்து தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது பலமான ஆதரவை வழங்கியுள்ளனர்.

தமிழ் மக்களின் உரிமை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் அதன் வழி தமிழர்களின் உரிமைகளை வென்று எடுப்பதற்கும் தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் அரசியல் தலைமை தேவை என்ற அடிப்படையில்; எத்தனையோ விமர்சனங்கள், பிரசாரங்கள் மத்தியிலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கான ஆதரவை தமிழ் மக்கள் தாமாகவே தீர்மானித்து வழங்கியுள்ளனர்.

இஃது

தமிழ் மக்களின் ஒற்றுமைக்கும் ஒரே வகையிலான சிந்தனைக்கும் தக்க சான்றாகும். கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் நலன் சார் பணிகளில் ஈடுபடவில்லை. அரசியல் புலத்தில் தமது ஸ்திரத்தன்மையை நிரூபிக்க வில்லை என்ற குறைபாடுகள் இருந்த போதிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தோல்வி தமிழ் இனத்துக்குப் பாதகமாக அமையும் என்ற ஒரே காரணத்துக்காக தமிழ் மக்கள் தாய் உள்ளதோடு தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களித்தனர்.

தான் பெற்றபிள்ளை செய்த தவறை பொறுத்து பிள்ளை மீது பாசம் காட்டும் ஒரு தாயின் பரிவு போல, தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தங்கள் வாக்கை அளித்து நல்லதொரு வெற்றியைக் கொடுத்துள்ளனர். இந்த வெற்றி தமிழ் மக்களின் இனப்பற்றுறுதியின் வெளிப்பாடாகும்.

ஆகையால் வடபுலத்தில் தேர்தலில் வெற்றி பெற்ற அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்கள் பணி செய்வதென சத்தியம் செய்து கொள்ளவேண்டும்.

மக்களுக்கு வாக்குறுதி அளித்து அவர்களின் வாக்குகளைப் பெற்றுவிட்டு, கிடைத்த பதவியோடு சொந்த வாழ்க்கையை சுகமாக்குதல் என்ற நினைப்பில் செயற்படாமல்,

ஒரு வேளை உண்பதற்கு உணவு இல்லை என்ற துன்பத்தையும் பொருட்படுத்தாமல், வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று தங்கள் வாக்கை அளித்து தமிழ் இனம் வாழ வேண்டும் என்று நினைத்த தமிழ் உள்ளங்களின் உணர்வை மதித்து நடப்பது தமிழர் தேசத்தில் வெற்றியீட்டிய அத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களதும் தலையாய கடமையாகும்.

அன்றுபோல் இன்றும் நாளையும் என்றிராமல், விமர்சனங்களை ஏற்று; நீதி, நேர்மை, நியாயம் என்ற தர்மத்தின் வழியில் தமிழினத்தின் உரிமையை வென்றெடுக்க உண்மையோடு செயற்படுங்கள்.

பொய்யும் அநீதியும் மற்றவர்களின் வாழ்வை அறுப்பதுமே சிந்தனையாக இருந்தால் என்றோ ஒருநாள் தர்மம் உங்களைத் தண்டிக்கும் என்பதையும் மறந்து விடாதீர்கள்.

# நல்லாட்சியின் விசேட அம்சமாக நடைபெற்ற தேர்தலை பார்க்கிறேன்

## பொதுத் தேர்தல் குறித்து ஜனாதிபதி உரை

(கொழும்பு)

நான் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட 06 மாத காலப்பகுதியினுள் இந்நாட்டில் ஏற்படுத்த கூடிய மாற்றங்களில் விசேடமாக நல்லாட்சியின் அம்சமாக இத் தேர்தல் மிகவும் சமாதானமாக நடைபெற்றதென நான் நம்புகின்றேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உரையில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நடைபெற்ற பொதுத் தேர்தல் தொடர்பில் நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றினை ஆற்றியிருந்தார்.

ஜனாதிபதி தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனவரி மாதம் 08ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில், நான் போட்டியிட்ட தேர்தலுக்கு முன்னரும் அதற்கு பின்னரான காலப்பகுதியிலும் இடம்பெற்றுள்ள மாற்றங்கள் குறித்து உங்களுக்கு தெரியும்.

ஜனவரி 08ஆம் திகதி தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் பெல்மடுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போது என் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், அதே போன்று பத்தேகம பிரதேசத்தில் தேர்தல் மேடை மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூடு,

பொலநறுவை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூடு, அதேபோல நிவித்திகல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் மற்றும் நாட்டில் ஏனைய பிரதேசங்களில் மிகவும் தீவிரமான சம்பவங்கள் இடம்பெற்றன.

பிரதானமாக அரசாங்க அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியமை, அரச சொத்துக்களை தவறான முறையில் பயன்படுத்தியமை, விசேடமான அரசாங்க ஊடகங்கள் ஊடாக ஜனவரி மாதம் 08ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் அரசாங்கம் செயற்பட்ட முறைகள் தொடர்பில் இந்நாட்டு மக்களுக்கு நினைவில் இருக்கும்.

எனினும் இம்முறை நடைபெற்ற தேர்தல் முற்றிலுமாக மாற்றமடைந்திருந்தமையும் உங்களுக்கு தெரியும். எனவே சமாதானமான முறையில் நடைபெற்ற தேர்தல் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் ஜனாதிபதியாக செயற்படுகின்ற சந்தர்ப்பத்தில், வரலாற்றில் முதல் தடவையாக மிகவும் சமாதானமாக தேர்தல் நடைபெற்றமை மிகவும் மகிழ்ச்சியான ஒரு விடயமாகும்.

அரசாங்க தலைவர் ஒருவர் தேர்தல் நட வடிக்கைகளில் ஈடுபடாது சுயாதீனமாக மத்தியில் செயற்படுவதன் முடிவாகவே சமாதானமான தேர்தல் ஒன்றினை நடத்த முடியும் என்பதனை இதன் ஊடாக நாங்கள் கற்றுக் கொண்ட பாடமாக இருக்கின்றது.

தனது அரசியல் அதிகாரத்தை பெரிய அளவில் பொலிஸ் ஊடாக, அரசாங்க அதிகாரிகள் ஊடாக, தேர்தலுக்கு பயன்படுத்துவதன் மூலம் சமாதானமான மற்றும் சுதந்திரமான தேர்தல் ஒன்றினை நடத்த முடியாது.

அதனால்தான் எங்கள் தேர்தல் வரலாற்றில் அதிக அளவிலான கறுப்பு புள்ளிகள் காணப்படுகின்றது.

எனவே இம்முறை எனது நிறைவேற்று அதிகாரங்களை பயன்படுத்தி பொலிஸ் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்காமல், திருத்தச்சட்டத்துக்கமைய தேர்தல் ஆணையாளர் மற்றும் அவரது அதிகாரிகளுக்கும்,

பொலிஸார் மற்றும் அவர்களின் அதிகாரிகளுக்கும், தேர்தல் கடமைகளுக்கமைய வேட்பு மனு வழங்கிய நாளில் இருந்து இன்று வரையில் செயற்பட்ட அனைத்து நபர்களுக்கும் தங்கள் கடமைகளுக்கு தங்களிடம் காணப்படுகின்ற அதிகாரங்களை கொண்டு சட்ட ரீதியாகவும் சமாதானமாகவும் செயற்படுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

எனவே இதனை குறித்து நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும். தேர்தல் ஆணையாளர் மற்றும் அவரது அனைத்து அதிகாரிகளுக்கும், வாக்குசாவடிகளில் செயற்பட்ட அதிகாரிகள், வாக்கெண்ணும் அதிகாரிகள்,

இந் நடவடிக்கைகளுக்கு அனைத்து முறையிலும் ஆதரவு வழங்கிய மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அரசாங்க அதிகாரிகளுக்கும், அதேபோல் பொலிஸ் அதிபர் உட்பட அவரது அதிகாரிகளுக்கு பாதுகாப்பு பிரிவின் இராணுவ பிரதானி உட்பட அனைவருக்கும் எனது முழுமையான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாரிய அளவிலான அர்ப்பணிப்புகளுடனும் பொறுப்புடனும் செயற்பட்ட, சமாதானமான தேர்தலை நடத்துவதற்கு அனைவரிமும் காணப்பட்ட அர்ப்பணிப்புகளுக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

அத்துடன் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் பலர் கடந்த நாட்களில் எங்கள நாட்டுக்கு வருகை தந்திருந்தார்கள், இலங்கை வரலாற்றில் இவ்வளவு சமாதானமாக நடைபெற்ற தேர்தல் இதுவென அவர்களினாலும் காண முடிந்தது.

எங்களுக்கு அவசியமான ஆதரவு வழங்கியமை மற்றும் எங்கள் நாட்டுக்கு வந்தமைக்காக அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

இறுதியாக இத் தேர்தலின் முடிவுகள் வெளியாகும் தினங்களில் தேர்தல் வன்முறைகளின்றி, அரசியல் கட்சி பேதமின்றி, இந்நாட்டின் கௌரவமான, அன்பான மக்கள் மிகவும் சமாதானமான முறையில் தேர்தல் முடிவுகளை அனுபவிக்குமாறு நான் அன்புடன் கேட்டுகொள்கின்றேன்.

அதனால் தேர்தல் வன்முறைகள் எவ் முறையிலும் இடம்பெறாமல் செயற்படுவதன் மூலம் தேசிய ரீதியிலும் விசேட கௌரவத்தை பாதுகாக்க முடியும்.

வெற்றி பெற்ற குழு தோல்வியடைந்த குழுவுக்கு தொல்லைகள் கொடுக்காது, மன ரீதியிலும் மிகவும் சமாதான முறையில் தேர்தல் முடிவுகளை கொண்டாடுமாறு பணிவுடன் கேட்டு கொள்கின்றேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (செ-12)

## சுவர் வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழப்பு

சுவர் இடிந்து வீழ்ந்ததில் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் மாசார் பளைப் பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

பிரஸ்தாப நபர் கட்டிடம் இடிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த போது எதிர்பாராத விதமாக சுவர் இடிந்து குறித்த நபரின் தலைப்பகுதியில் பலமாக மோதியது.

இதில் அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மகேந்திரம் (வயது 55) என்பவரே மேற்படி விபத்தில் உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியப் பிரதமர் வாழ்த்து

(டில்லி)

இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்புகொண்டு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த வெற்றி இருநாட்டு உறவுகளையும் மேலும் வலுப்படுத்தும் என்றும் இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றதையிட்டு இலங்கை மக்களுக்கும் நரேந்திர மோடி தனது வாழ்த்துக்களை கூறியுள்ளார். (செ-12)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### முதலில் கடவுளைத் தேடு



- ✦ முதலில் கடவுளைத் தேடு. அதன்பின், உலகப் பொருட்களை தேடி செல்லலாம்.
- ✦ எல்லா மனிதர்களிடத்திலும் கடவுள் இருக்கிறார். ஆனால், கடவுளிடத்தில் எல்லா மனிதர்களும் இருப்பதில்லை.
- ✦ மனிதப்பிறவி கிடைப்பதற்கு அரிதானது. இதை பயன்படுத்தி கடவுளை அறிய முற்படுங்கள்.
- ✦ கடவுளின் திருநாமத்தை இடைவிடாது ஜெபித்தால் உடல், மனம் எல்லாம் தூய்மை பெறும்.
- ✦ நம்பிக்கை ஆழமானால் கடலையும் தாண்டலாம்.
- ✦ ராம நாமத்தின் மீது கொண்ட நம்பிக்கையால் அனுமன் இதை சாதித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய கிரிக்கெட் வீரர்களின் சம்பளம் எவ்வளவு தெரியுமா?



இந்திய கிரிக்கெட் வீரர்களின் சம்பள பட்டியலை கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ளது.

வீரர்களின் ஊதியம் ஏ, பி, சி என்ற மூன்று நிலைகளில் பிரிக்கப்படுகிறது. வீரர்களின் செயற்பாடு, அவர்களின் அனுபவம் ஆகியவற்றை வைத்து வீரர்களின் சம்பளம் வேறுபடும்.

**பிரிவு "ஏ"**

இதில் டோனி, விராட் கோலி, சுரேஷ் ரெய்னா, அஸ்வின், புவனேஷ்வர் குமார் ஆகியோர் இடம்பெற்றுளளனர்.இவர்களுக்கு அடிபபடை ஊதியம் ரூ. 1 கோடி வழுங்கப்படுகிறது. 1 டெஸ்ட் போட்டிக்கு ரூ. 5 இலட்சமும், ஒரு ஒருநாள் போட்டிக்கு 3 இலட்சமும் கொடுக்கப்படுகிறது.

**பிரிவு "பி"**

ஓஜா, புஜாரா, முரளிவிஜய், ஜடேஜா, இஷாந்த் சர்மா, ரோஹித் சர்மா, ஷிகர் தவான், உமேஷ் யாதவ், ரஹானே, ராயுடு, முகமது சமி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ. 50 இலட்சம். ஒரு டெஸ்ட் போடடிக்கு 3 இலட்சம், ஒரு ஒருநாள் போட்டிக்கு 1.75 இலட்சம் வழுங்கப்படுகிறது.

**பிரிவு "சி"**

மிஸ்ரா, ஆரோன், சகா, பின்னி, புன்காஜ் சிங், வினய் குமார், மொகித் சர்மா, குல்கர்னி, ரசூல், அக்சர் படேல், திவாரி, உத்தப்பா, கரண் சர்மா, சஞ்சு சாம்சன், குல்தீப் யாதவ், ராகுல் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ.25 இலட்சம், ஒரு டெஸ்ட் போட்டிக்கு 1.5 இலட்சமும், ஒரு ஒருநாள் போட்டிக்கு ஒரு இலட்சமும் கொடுக்கப்படுகிறது.

ஐபிஎல் ஒப்பந்தங்களுக்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. தவிர, போனஸாக கூடுதல் சம்பளம் கிடைக்கும்.

அதாவது டெஸ்ட் தரவரிசையில் 3 இடங்களுக்குள் உள்ள அணிக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்றால் 50 சதவீத கூடுதல் ஊதியம் கிடைக்கும்.

இருபது-20 உலகக்கிண்ணம் அல்லது 50 ஓவர் உலகக் கிண்ணம் வென்றால் 300 சதவீதம் அதிகமாக ஊதியம் கிடைக்கும்.

டெஸ்ட் அல்லது ஒருநாள் போட்டியில சதம் அடித்தால் ரூ 5 இலட்சம், இரட்டை சதம் அடித்தால் ரூ.7 இலட்சம் துடுப்பாட்ட வீரர்களுக்கு கிடைக்கும்.

அதேபோல் பந்து வீச்சாளர்களுக்கு ஒருநாள் அல்லது டெஸ்ட் போட்டிகளில் 5 விக்கெட் வீழ்த்தினால் ரூ. 5 இலட்சமும், 10 விக்கெட் வீழ்த்தினால் ரூ. 7 இலட்சமும் வழுங்கப்படுகிறது. இந்த தகவலை பிரபல விளையாட்டு இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளது. (க)

# தரவரிசையில் சங்கக்காரவை பின்னுக்குத் தள்ளிய மத்தியூஸ்



சர்வதேச கிரிக்கெட் வாரியம் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில் இலங்கை அணியின் தலைவர் மத்யூஸ் 860 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

அதே சமயம் இலங்கை அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்கக்கார (851 புள்ளிகள்) 6ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

இலங்கை விக்கெட் கீப்பர் சந்திமால் (646 புள்ளிகள்) 23 ஆவது இடத்திலும், திரிமன்னே 4 இடங்கள் முன்னேறி 78ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

இந்திய அணித்தலைவர் விராட் கோலி (759 புள்ளிகள்) 10ஆவது இடத்தில் இருக்கிறார். முரளிவிஜய் 21 ஆவது இடத்திலும், ரஹானே 22 ஆவது இடத்திலும் இருக்கின்ற னர். புஜாரா 27ஆவது இடத்தில் உள்ளார்.

இந்த பட்டியலில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் (917 புள்ளிகள்) முதலிடத்திலும், டிவில்லியர்ஸ் (890 புள்ளிகள்), ஸ்டீவன் ஸ்மித் (884 புள்ளிகள்) முறையே 2 மற்றும் 3வது இடத்தில் உள்ளனர்.(க)

விளையாட்டுச் செய்திகள்

## நியூசிலாந்து- தெ.ஆபிரிக்கா ஒருநாள் தொடர் இன்று

நியூசிலாந்து கிரிக்கெட் அணி தென் ஆபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 20 ஓவர் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.

3 ஒருநாள் போட்டித் தொடரில் முதல் ஆட்டம் செங்சூரியனில் நாளை நடக்கிறது.

ஒருநாள் தொடரை கைப்பற்ற இரு அணிகளும் போராடும்.இதனால் இந்த தொடர் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

ஆண்டுக்கு விளம்பரம் மூலம்

# டோனிக்கு ரூபா 140 கோடி வருமானம்



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவரான டோனி விளம்பரங்கள் மூலம் அதிகம் சம்பாதிக்கும் வீரர்களில் முதலிடத்தில் இருக்கிறார்.

டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற டோனி, தற்போது ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளின் தலைவராக செயற்பட்டு வருகிறார். இவர் விளம்பரம் மூலம் ஆண்டுக்கு ரூ.130 கோடி முதல் ரூ.140 கோடி வரை சம்பாதிக்கிறார்.

பெப்சி, ரீபெக், பூஸ்ட் உட்பட 15 விளம்பர நிறுவனங்களின் ஒப்பந்தங்கள் அவரது கைவசம் உள்ளது. ரித்தி ஸ்போர்ட்ஸ் நிறுவனம் அவரது விளம்பரங்களை கவனித்து வருகிறது. இதை அவரது நண்பர் நடத்தி வருகிறார்.

இவருக்கு அடுத்தபடியாக டெஸ்ட் அணியின் தலைவரான விராட் கோலி விளம்பரம் மூலம் ஆண்டுக்கு ரூ.60 கோடி முதல் ரூ.70 கோடி சம்பாதிக்கிறார். டி.வி.எஸ்., அடிடாஸ், பூஸ்ட், எம்.ஆர்.எப். உட்பட 13 நிறுவ னங்கள் அவர் கைவசம் இருக்கிறது.

இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரரான தவான் ரூ.6 கோடி முதல் ரூ.7 கோடி வரை விளம்பரங்கள் மூலம் சம்பாதிக்கிறார்.

முன்னணி வீரர்களான ரோஹித் சர்மா ரூ.4 கோடி முதல் 5 கோடி வரையிலும், ரெய்னா, அஸ்வின் ரூ.2 கோடி முதல் 3 கோடி வரையிலும், ரஹானே ரூ.2 கோடியும் விளம்பரம் மூலம் சம்பாதிக்கிறார்கள். (க)

# வெள்ளிப்பதக்கம் வென்ற சாய்னாவுக்கு மோடி வாழ்த்து




இந்தோனேஷிய தலைநகர் ஜகர்த்தாவில் நடந்த 22ஆவது உலக பட்மிண்டன் சம்பியன்ஷிப் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதி ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால், நடப்பு சம்பியன் கரோலினா மரினிடம் (ஸ்பெயின்) தோல்வி கண்டு வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கி சரித்திரம் படைத்தார்.

உலக பட்மிண்டன் போட்டியில் இந்திய வீராங்கனை ஒருவர் வெள்ளிப்பதக்கம் வெல்வது இதுவே முதல்முறையாகும். இதற்கு முன்பு இந்திய வீரர் பிரகாஷ் படுகோனே (1983), வீராங்கனைகள் ஜுவாலா கட்டா-அஸ்வினி பொன்னப்பா ஜோடி (2011), பி.வி.சிந்து (2013, 2014) ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்று இருந்தனர்.

உலக போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று வரலாறு படைத்த சாய்னா நேவாலுக்கு, பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக டுவிட்டரில் அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், 'உலக பட்மிண்டன் சம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வெல்வது என்பது அரிய சாதனையாகும்.

அவரது சாதனை நிச்சயம் எல்லோருக்கும் உத்வேகம் அளிக்கும். சாய்னாவுக்கு வாழ்த்துக்கள்' என்று தெரிவித்துள்ளார். (க)

# சின்சினாட்டி டென்னிஸ் பயஸ் ஜோடி வெற்றி



சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் இந்தியாவின் பயஸ், சுவிட்சர்லாந்தின் வாவ்ரின்கா ஜோடி வெற்றி பெற்றது.

அமெரிக்காவில் சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஆண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் பயஸ், சுவிட்சர்லாந்தின் வாவ்ரின்கா ஜோடி, தென் ஆபிரிக்காவின் ஆண்டர்சன், பிரான்சின் ஜெரிமி ஜோடியை சந்தித்தது.

முதல் செட்டை 1:6 என மோசமாக இழந்த பயஸ் ஜோடி, அடுத்த செட்டை 6:1 என வென்று பதிலடி தந்தது. வெற்றியாளரை நிர்ணயிக்கும் 'சூப்பர் டை பிரேக்கரில்' அசத்திய பயஸ் ஜோடி 10:6 என கைப்பற்றியது. முடிவில் பயஸ், வாவ்ரின்கா ஜோடி 1:6, 6:1, 10:6 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்றது.

இத்தொடரில் பயஸ் மீண்டும் ஜோடியை மாற்றியுள்ளார். இம்முறை, சுவிட்சர்லாந்தின் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்காவுடன் ஜோடி சேர்ந்துள்ளார்.இதன்மூலம் வாவ்ரின்கா, பயசின் 102ஆவது ஜோடி ஆனார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனி தொழில்நுட்ப துறைசார் நிபுணரின் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்

யாழ்.மாநகர சபையின் அனைத்துப் பிரிவுகளையும் கணனி மயப்படுத்துவதற்கு தேவையான வன்பொருட்களை கொள்வனவு செய்வதற்கும், மென்பொருட்களை உருவாக்குவதற்கும் ஏதுவாக கணனித் தொழில்நுட்பத் துறைசார் நிபுணரின் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் தகுதியான கேள்விதாரரிடமிருந்து கோரப்படுகின்றது.

விண்ணப்பதாரி தகவல் தொழில்நுட்பத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவராகவும் கணனி தொழில்நுட்ப துறைசார தொழில் அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். மேற்படி தகைமைகளை உடையவர்கள் சுயமாக தயாரித்த விண்ணப்பத்தினை 26.08.2015ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, ஆணையாளர், யாழ்.மாநகர சபை என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலதிக விபரங்களுக்கு 00212228874 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.** (சி-1844)

## பிரபாகரனின் வழிகாட்டுதலில் எனது பணியை தொடர்வேன்

### யாழில் அதிகூடிய விருப்புவாக்குகளை பெற்றுக் கொண்ட சிறீதரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் உருவாக்கப்பட்ட இந்த கட்சியில் அவரது வழிகாட்டலிலும் விடுதலைப் புலிகளின் காலத்தின் நீட்சியாக என்னுடைய பயணத்தை எனது மக்களின் உரிமைக்காகவும் தன்னாட்சிக்காகவும் பாடுபட்டு தொடர்ந்தும் செயற்படுவேன் என யாழ்.தேர்தல் மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ள சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நடைபெற்ற எட்டாவது நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியத்தின்பால் ஈர்ப்பும் பற்றும் கொண்ட தமிழ் மக்கள், தங்களின் விருப்பு வாக்குகளை எங்களின் கட்சியின் பெயராலே எனக்கு தந்திருக்கின்றார்கள். இந்த விருப்பு வாக்குகள் எனக்கு கிடைத்ததாக நான் கருதவில்லை. இது கட்சிக்கு கிடைத்த வாக்காகவும் மக்கள் தங்களின் விருப்பங்களை தந்திருக்கின்ற காரணத்தினாலும்,

தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமைக்கான சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வினை பெற்றுக்கொள்வதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் இருந்து தமிழர்கள் எப்படி போராடி வந்தார்களோ அந்த போராட்ட மற்றும் தமிழ்த் தேசிய உணர்வோடு தேசிய தலைவருடைய வழிகாட்டலில என்னுடைய பயணத்தை தொடர்ந்து மக்களுக்காகவும் என் தேசத்துக்காகவும் எனது பணியை ஆற்றுவதற்கு நான் மிகக்கூடிய அளவு பிரயத்தனப்பட்டுள்ளேன் என அவர் தெரிவித்தார். (செ-4)

## மரண அறிவித்தல்

### சிறீஸ்கந்தவேள்-விஜயமலர்



வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், சுன்னாகம், மயிலங்காட்டை புகுந்த இடமாகவும் தற்போது சுவிஸ்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிறீஸ்கந்தவேள்-விஜயமலர் 16.08.2015 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னராசா-கனகம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான மயிலங்காடு செல்லப்பா-பார்வதி தம்பதிகளின் மருமகளும், சிறீஸ்கந்தவேளின் அன்பு மனைவியும், வேதிகா (சுவிஸ்), கார்த்திகா (சுவிஸ்), கீர்த்திகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஜீவமலர், சிறீதரன் (உரிமையாளர்-ஸ்ரீ அம்பாள் வெல்டிங்), உமாராணி, இரவீந்திரன் (ரவி-சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரேவதி, ரவீந்திரன் (கிளி), தயாசக்தி (விதினி-சுவிஸ்), காலஞ்சென்ற சண்முகவேல் மற்றும் நவரத்தினம், சற்குணேஸ்வரி, நாகேஸ்வரி, ஞானேஸ்வரி (ஜேர்மனி), பாலகுணேந்திரன் (லண்டன்), சுகிர்தரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், ஜெகன் (சுவிஸ்), மதன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், வைஸ்ணவி (சுவிஸ்), சுவாகா (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும், கௌதமன் (லண்டன்), இராகுலன், ஆரூரன் (சுவிஸ்) ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.08.2015) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக காக்கைதீவு எருக்கலம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் கட்டையடி,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை. (1524)

தகவல்:சி.சிறீதரன்
(சகோதரன்)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி-இரவீந்திரன் (ரவி)

(உரிமையாளர் R.S பல்பொருள் வாணிபம்-ஆனைக்கோட்டை)



அம்பனை, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், மானிப்பாய் வீதி, 3ஆம் கட்டையடி ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இரவீந்திரன் (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி (இருபாலை) மற்றும் பசுபதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், சத்தியானந்தாதேவி(சத்தியா-ஆசிரியை யா/மானிப்பாய் செண் ஆன்ஸ் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், மேனகா, மகேந்திரன் (ரோசா-சுவிஸ்), பாலேந்திரன் (கிளி), அமுதா (கனடா), காலஞ்சென்ற கருணாநிதி (பவா) மற்றும் சியாமளா (சுவிஸ்), ரேணுகா (லண்டன்), இரகுலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரேவதி, சுதேந்திரன் (சுவிஸ்), சாந்தா (லண்டன்), குணேந்திரன் (லண்டன்), தர்மகுலசிங்கம் (ஓய்வூதியர்), சாந்தி (சுவிஸ்), பவானி, ரவீந்திரன் (கனடா), பாலச்சந்திரன் (சுவிஸ்), ஜெயசுதன் (லண்டன்), கலாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனனும், சிறீதரன் (உரிமையாளர்-ஸ்ரீ அம்பாள் வெல்டிங்), சுகிர்தரஞ்சன் (லண்டன்), ரஜீதாதேவி (சுவிஸ்), ஜெனற் (லண்டன்) ஆகியோரின் சகலனும், டாக்டர் செருஜனன் (களுபோவல வைத்தியசாலை), யதுர்சன் (ஊவா வெல்லச பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனும், பர்மிலா (தாதியர் பயிற்சிக் கல்லூரி இறுதி வருட மாணவி), சுஜிந்தன் (யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட 2ஆம் வருட மாணவன்), பிருந்தா, சுகிர்தா ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.08.2015) வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக காக்கைதீவு எருக்கலம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் கட்டையடி,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை. (1524)

தகவல்:-சத்தியானந்தாதேவி
(மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிச் சந்தர்ப்பம்!



பட்டத்துடன் தொழில் அனுபவம் உள்ள எவரும்
**கனடாவில் குடும்பத்துடன் குடியேறும் அரிய வாய்ப்பு**

150க்கு மேற்பட்ட தொழில் நிலைகளுக்கு | 180,000*க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்

கனேடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பிரதிநிதி ஊடாக
**100% பாதுகாப்பான சேவை**

FREE Assessment Send your CV to info@sikaram.lk
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
www.sikaram.lk

(C-1841)
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
Sikaram (Pvt) Ltd., 275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004
021 222 00 11


ஆட்சி அமைக்கும் வாய்ப்பு அதிகளவில் காணப்படுகிறது.

இதன்படி நாட்டின் அடுத்த பிரதமராகமீண்டும்ரணில் விக்கிர மசிங்கவே நியமிக்கப்படவுள்ளதாக அறிய முடிகின்றது.

இன்று 19ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதமர் ஆகியோர் தமது கடமைகளை பொறுப்பேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை மீண்டும் ஆட்சி அதிகாரத்தைதக்கவைப்பதற்காக பிரதமராக பதவி பெற பெரு முயற்சிசெய்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் கனவு தகர்ந்து போயுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (செ-12)

# ஐ.தே.க...

பெற்று நாடளாவிய ரீதியில் 83 ஆசனங்களை கைப்பற்றியதுடன் போனஸ் ஆசனங்கள் 12 ஐயும் தம்வசம் மேலதிகமாக பெற்று இரண்டாம் நிலையில் உள்ளது.

எனினும்நாடாளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 225. இதில் 196 உறுப்பினர்கள் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவர். மற்றைய 29 உறுப்பினர்கள் ஒவ்வொரு கட்சியும் தேர்தலில் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் தேசியப் பட்டியலில் நியமிக்கப்படுவர்.

இம் முறை எக் கட்சிக்கும் பெரும்பான்மையுடன் தனித்துஆட்சிஅமைக்கும் சந்தர்ப்பம் உருவாக இல்லை. எனினும் ஐ.தே.கட்சிக்கே கூட்டணி சேர்ந்து நாடாளுமன்றில்

## ஐ.தே.க ஆட்சி...

மக்கள் சுதந்திர கூட்டணி போனஸ் ஆசனங்களுடன் 95 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டுள்ளது.

அதேவேளை ஐ.தே.கவுக்கு பெரும்பான்மையாக ஆட்சியமைக்க இன்னும் 7 ஆசனங்கள் தேவைப்படுகின்ற நிலையில் தேசிய அரசாங்கம் அமைய அதிகூடிய வாய்ப்புள்ளது. (செ-11)


**CIMA-UK ENGINEERING-USA**
**BIT - University of Colombo**
**புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள்**

கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோர், பல்கலைக்கழக மாணவர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரச வேலையிலும், வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிகசம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக்குறைந்த கல்வித் தகைமை க.பொ.த.சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 28 Aug. புலமைப்பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் உங்கள் முழுப்பெயர், கற்கைநெறி பிறந்த திகதி என்பவற்றை 772395895 ற்கு sms செய்யவும். பதிவுக்கட்டணம், வருடாந்தக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக் கட்டணம் என்பன புலமைப்பரிசிலாக வழங்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களை யாழ் பல்கலைக்கழகத்துக்கு அருகிலுள்ள MCS நிறுவனத்தில். A.L 2015 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.(C-1842)


# த.தே.கூட்டமைப்பு...

வடக்கு கிழக்கில் ஐக்கிய தேசிய கட்சி ஒன்பது ஆசனங்களையும் மக்கள் விடுதலை முன்னணி நான்கு ஆசனங்களையும் பெற்றுள்ளதோடு, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன தலா ஒரு ஆசனத்தை கைப்பற்றியுள்ளன.

**வட மாகாணம்**

**வன்னி தேர்தல் மாவட்டம்**

01) இலங்கை தமிழரசுக் கட்சி
பெற்ற மொத்த வாக்குகள் - 89,886 (54.55%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 4

02) ஐக்கிய தேசியக் கட்சி
பெற்ற மொத்த வாக்குகள் - 39,513 (23.98%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 1

03) ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
பெற்ற மொத்த வாக்குகள் - 20,965 (12.72%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 1

**யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்**

01) இலங்கை தமிழரசுக் கட்சி
பெற்ற மொத்த வாக்குகள் - 2,07,577 (69.12%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 5

02) ஈழ மக்கள் ஜனநாயக கட்சி
பெற்ற மொத்த வாக்குகள் - 30,232 (10.07%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 1

03) ஐக்கிய தேசியக் கட்சி
பெற்ற மொத்த வாக்குகள் - 20,025 (6.67%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 1

**கிழக்கு மாகாணம்**

**மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம்**

01) இலங்கை தமிழரசுக் கட்சி
பெற்ற மொத்த வாக்குகள் - 127,185 (53.25%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 03

02) ஐக்கிய தேசியக் கட்சி
பெற்ற மொத்த வாக்குகள் - 32,359 (13.55%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 01

03) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
பெற்ற மொத்த வாக்குகள் - 38,477 (16.11%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 01

**திருகோணமலை தேர்தல் மாவட்டம்**

01) ஐக்கிய தேசியக் கட்சி
பெற்ற மொத்த வாக்குகள் - 83,638 (46.36%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 2

02) இலங்கை தமிழரசுக் கட்சி
பெற்ற மொத்த வாக்குகள் - 45,894 (25.44%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 1

03) ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
பெற்ற மொத்த வாக்குகள் - 38463 (21.32%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 1

**திகாமடுல்ல தேர்தல் மாவட்டம்**

01) ஐக்கிய தேசியக் கட்சி
பெற்ற மொத்த வாக்குகள் - 151,013 (46.30%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 04

02) ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
பெற்ற மொத்த வாக்குகள் - 89,334 (27.39%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 02

03) இலங்கை தமிழரசுக் கட்சி
பெற்ற மொத்த வாக்குகள் - 45,421 (13.92%)
கிடைக்கப் பெற்ற ஆசனங்கள் - 01

இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ளன வடக்கு கிழக்கில் உள்ள 95 வீதத்திற்கும் அதிகமான தொகுதிகளில் தமிழ் தேசிய கூட்ட மைப்பே பெருவாரியாக வெற்றி பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)


# இறுதிச் சந்தர்ப்பம்!



பட்டத்துடன் தொழில் அனுபவம் உள்ள எவரும்
**கனடாவில் குடும்பத்துடன் குடியேறும் அரிய வாய்ப்பு**

150க்கு மேற்பட்ட தொழில் நிலைகளுக்கு | 180,000*க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்

கனேடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம்புள்ளி அடிப்படையில் உங்கள் விண்ணப்ப தகைமையை மதிப்பீடு செய்து, நீங்களே நேரடியாக கனேடிய முகவர் ஊடாக விண்ணப்பம் செய்யக்கூடிய
**100% பாதுகாப்பான ஏற்பாடு**
இதுவரை 6,851 பேர் நிரந்தர குடியுரிமை விசா பெற்றனர்

FREE Assessment Send your CV to info@sikaram.lk
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
www.sikaram.lk

(C-1841)
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
Sikaram (Pvt) Ltd., 275-2/1 மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004
021 222 00 11


# தோல்வியை ஏற்றுக் கொள்கின்றேன்

## மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

தேர்தல் முடிவுகள் குறித்து முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாறுபட்ட கருத்துக்களை முன் வைத்து வருவதாக ஊடகங்கள் தெரிவித்தன.

தேர்தல் தோல்வியை ஏற்றுக் கொள்வதாக பிரான்ஸ் ஊடகமொன் றுக்கு முன்னாள் ஜனாதிபதி குறிப் பிட்டிருந்தார்.

பிரதமர் கனவு கலைந்து விட்டது, நாடாளுமன்ற உறுப்பின ராக கடமையாற்ற விரும்புவதாக ஏ.எப்.பீ ஊடகத்திற்கு மகிந்த தெரிவித்திருந்தார்.

பின்னர் தனது டுவிட்டர் கணக் கில், இறுதி முடிவுகளை தேர்தல் ஆணையாளர் அறிவிக்கும் வரை யில் வெற்றி தோல்வி பற்றி கூற முடியாது என மகிந்த தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் றொய்டர்ஸ் செய்தி சேவைக்கு அளித்த தொலைபேசி நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் நல்ல கொள்கைகளுக்கு ஆதரவளிப்பது டன் பிழையான கொள்கைகளை தீர்க்கப் போவதாகவும் தெரிவித் துள்ளார்.

எனவே மகிந்த ராஜபக்ஷ தேர் தல் முடிவு பற்றி எவ்வித தெளி வான நிலைப்பாட்டையும் வெளியிடவில்லை. (செ-11)


நுணாவில் மேற்கு சாவகச்சேரி, அருள்மிகு மணங்குணாய் வீரகத்திப்பிள்ளையார் ஆலயம்
**வருடாந்த மஹோற்சவம் 2015**



விநாயகப்பெருமான் அடியார்களே!

நிகழும் மங்களகரமான மன்மதவருடம் ஆவணி மாதம் 03ம் நாள்(20-08-2015) வியாழக்கிழமை சித்திரை நட்சத்திரமும் ஷஷ்டி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுப வேளையில் பகல் 11.00 மணியளவில் கொடியேற்றத்துடன் கூடிய திவ்விய மஹோற்சவம் ஆரம்பமாகும். மாலை 6.00மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி இரவு 8.00மணியளவில் எம்பெருமான் திருவீதியுலா வருவார்.

அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து விநாயகப்பெருமான் திருவருளைப்பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கிறோம்

கொடியேற்றத்திருவிழா உபயகாரர்கள்,
கதிரவேலு சுப்பிரமணியம்(தர்மகர்த்தா) குடும்பம்

(1521)

**வேலையாள் தேவை**

அசைவ உணவகம் ஒன்றுக்கு றொட்டி, கொத்து றொட்டி தயாரிக்க தெரிந்த வேலையாள் தேவை
(1525)
தொடர்புகளுக்கு
**0771258072**

**வீடு, காணி விற்பனைக்கு**

நீர்வேலியில் இராஜபாதைக்கு மிக அண்மையில் நல்ல நிலையில் தனிக் கிணற்றுடன் கூடிய வீடு வளவு, தோட்டக் காணியும் (வீடு, கட்டடங்களும் கட்டலாம்) உடனடி விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு
**0771532384**
(C-1837)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.